اسلام کی قدر پہچانیے

# இஸ்லாத்தின் கண்ணியம் பேணுவோம்


மௌலானா பீர் துல்ஃபிகார் அஹ்மத்
ஸாஹிப் நக்ஷபந்தீ (ரஹ்)

தமிழில்
மௌலானா ரியாஜுத்தீன் ஹஸனீ
பேராசிரியர்: உஸ்வதுல் ஹஸனா பள்ளபட்டி



வெளியீடு
கான்காஹெ தாரே ஈமான்
காயிதெமில்லத் நகர்
மேல்விஷாரம்

# உள்ளே


முன்னுரை........................................................................ 4

மனித உடல் என்பது எதிரெதிரானவற்றின் கலவையாகும்.............................................................. 7

குடும்ப வாழ்வில் எதிரெதிரானவைகளின் சேர்க்கை........ 10

இரு பொருட்களை இணைப்பதற்கான விதிமுறைகள்..... 14

இஸ்லாமிய மார்க்கத்தின் மூலமே இரண்டு இதயங்களின் இணைப்பு சாத்தியப்படும்......................... 16

இஸ்லாமிய மார்க்கம் எதிர்பாராத ஒரு வரப்பிரசாதமாகும்.................................................. 19

தங்கத்தை பித்தளை என்று அல்ல, தங்கம் என்று நினைத்துப் பாருங்கள்............................................. 22

இறைநம்பிக்கைப் பற்றிய கண்ணோட்டம்........................ 24

பதற்றத்திலிருந்து நிவாரணம்.................................... 24

நியூயார்க்கில் 700 பைத்தியக்கார விடுதிகள் உள்ளன!........................................................................ 26

அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பதன் பலன்.......... 29

பெற்றோர்கள் பற்றிய கருத்தோட்டம்................................. 33

திருமண வாழ்க்கைப் பற்றிய கண்ணோட்டம்................... 39

பிறர் நலன் நாடல் பற்றிய கண்ணோட்டம்...................... 44

நுகர்வோரின் நலன்நாடல்............................................. 45

வியாபாரியிடம் நலன் நாடல்........................................ 46

அறிமுகமில்லாதவருக்கும் நலன் நாடல்........................ 48

கடைக்காரர்களுக்கு நலன் நாடல்................................ 50

இறைமறுப்பாளர்கள் பிறர் மீது இரக்கம்
காட்டும் பாணி.................................................. 53

இறைமறுப்பாளர்களின் நாய்கள் மற்றும் பூனைகளின்
செலவுகள்...................................................... 54

இஸ்லாத்தில் அடக்கம் மற்றும் கற்பு பற்றிய
கருத்தோட்டம்.................................................. 56

வெட்கம் பற்றி இறைமறுப்பாளர்களின் போதனை........... 57

ரோஷமற்ற மட்டரகமான பார்ட்டிகள்............................. 58

உண்மை பற்றிய கண்ணோட்டம் (இஸ்லாமிய
போதனைகள்)................................................... 60

இஸ்லாத்தின் வெற்றி............................................ 61

அந்த நாளுக்காவே நாட்கள் எண்ணப்பட்டன.................. 64

விட்டுக் கொடுத்தல் பற்றிய கண்ணோட்டம்...................... 66

மூன்று தோழர்களின் முன்மாதிரியான தியாகம்............... 68

இறைநம்பிக்கை அற்ற சமூகத்திற்கான ஒரு
உதாரணம்....................................................... 72

இஸ்லாமிய சமூகத்தின் ஒரு எடுத்துக்காட்டு.................... 74

மனத்தூய்மை பற்றிய கண்ணோட்டம்........................... 79

இரு சக்களத்திகளுக்கு மத்தியில் தூய்மையான,
நேர்மையானத் தொடர்பு........................................ 82

ஒரு ஏழையின் தூய்மையான எண்ணம்...................... 86

ஒரு இரக்கமுள்ள ஹாஜியின் தூய்மையான
எண்ணம்........................................................ 90

# முன்னுரை

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ اَمَّا بَعْدُ

கருணையும் அருளும் பொழியும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பெயரால் தொடங்குகிறேன்.

மனிதன் இறைவனின் படைப்புகளில் மிகச் சிறந்தவன். அவனது உடல் உறுப்புகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு தன்மைகளைக் கொண்டிருந்தாலும், அவை அனைத்தையும் 'உயிர்' என்ற ஒரு சக்தி ஒன்றிணைத்துச் செயல்பட வைக்கிறது. ஒரு உறுப்புக்கு வலி ஏற்பட்டால் முழு உடலும் துடிப்பதைப் போல, ஒரு குடும்பமும் சமூகமும் பிணைக்கப்பட்டிருக்க வேண்டும். இத்தகைய உயரிய பிணைப்பை ஒரு மனிதனுக்குக் கற்றுக்கொடுப்பது 'தீன்' எனப்படும் இஸ்லாமிய வாழ்க்கை முறையாகும்.

இன்றைய நவீன உலகில், மனிதன் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ரீதியாகப் பெரும் வளர்ச்சி அடைந்திருந்தாலும், மன அமைதியிலும் ஒழுக்க விழுமியங்களிலும் பெரும் சரிவைச் சந்தித்து வருகிறான். குறிப்பாக, மேலைநாட்டு

நாகரிகத்தின் தாக்கத்தால் குடும்ப உறவுகள் சிதைந்து, பெற்றோரை முதியோர் இல்லங்களில் விடும் அவல நிலையும், திருமண பந்தத்தின் புனிதத்தை உணராத போக்கும் அதிகரித்து வருகின்றன. இத்தகைய சூழலில், இஸ்லாமிய வாழ்வியல் முறை என்பது வெறும் சடங்குகளின் தொகுப்பு மட்டுமல்ல; அது ஒரு மனிதனை பண்பட்டவனாகவும், பிறர் நலன் நாடுபவனாகவும் மாற்ற ஒரு உன்னதமான வழியாகும்.

இந்தப் புத்தகம், இஸ்லாமிய மார்க்கம் மனிதர்களுக்கு வழங்கியுள்ள கண்ணியத்தையும், அது போதிக்கும் உன்னத வாழ்க்கை நெறிகளையும் மிக அழகாகத் தெளிவுபடுத்துகிறது.

1. இறைநம்பிக்கை (ஈமான்): ஒரு மனிதனைத் துன்ப காலங்களில் நிலைகுலையாமல் காப்பதோடு, அவனது மனப் பதற்றத்தைத் தணிக்கும் மருந்தாக எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் புத்தகம் விளக்குகிறது.

2. குடும்ப உறவுகள்: பெற்றோரை அன்புடன் பார்ப்பது ஹஜ் செய்த நன்மையைத் தரும் என்ற உன்னதப் போதனைகளையும், கணவன்–மனைவி இடையிலான பாசத்தையும் இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் முன்வைக்கிறது.

3.சமூகநலம்:வியாபாரம்முதல்விருந்தோம்பல் வரை பிறருக்கு எவ்வித தீங்கும் செய்யாமல்,

அவர்களின் நலனை மட்டும் முன்னிறுத்தி வாழ்ந்த நமது முன்னோர்களின் வாழ்வியல் உதாரணங்கள் இதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இஸ்லாத்தின் போதனைகள் வெறும் கொள்கைகளாக இல்லாமல், அவை ஒரு கொலை யாளியைக் கூட எறும்புக்கு அஞ்சும் மென்மை யான இதயமுள்ளவராக மாற்றும் வல்லமை கொண்டவை. இந்த நூலைப் படிப்பதன் மூலம், இஸ்லாமிய வாழ்க்கை முறையைத் தாழ்வு மனப்பான்மையின்றிப் பெருமையுடன் பின்பற்றி, இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெற இப்புத்தகம் ஒரு சிறந்த வழிகாட்டியாக அமையும்.

வாசிப்போம்! இஸ்லாத்தின் கண்ணியத்தைப் பேணி வாழ்வோம்!

**மவ்லானா முஃப்தி ஷகீல் அஹ்மத் ஸாஹிப் நக்ஷபந்தீ**
**துணை முதல்வர்: மத்ரஸா பாகியாதுஸ்ஸாலிஹாத்,**
**வேலூர்**

# மனித உடல் என்பது எதிரெதிரானவற்றின் கலவையாகும்

மனிதன் அல்லாஹ்வுடைய ஆற்றலின் ஒரு தலைசிறந்த படைப்பாவான். அவன் பல்வேறு உறுப்புகளின் தொகுப்பானவன். நாம் சிந்தித்துப் பார்த்தால் அவனது ஒவ்வொரு உறுப்பும் அதன் பண்புகளில் மற்றொன்றிலிருந்து வேறுபட்டிருப்பதைக் காணலாம். அதன்படி இந்த உடல் எதிரெதிரானவற்றின் கலவையாக இருப்பது போல் தெரியும். உதாரணமாக கண் மூலம் பார்க்க முடியும் ஆனால் உடலின் மற்ற உறுப்புக்களால் பார்க்க முடியாது. இவ்விதத்தில் கண் மற்ற உறுப்புக்களுக்கு எதிரானதாகிவிட்டது. காதுகளால் கேட்க முடியும் ஆனால் உடலின் மற்ற பகுதிகளால் கேட்க முடியாது. இவ்விதத்தில் காது மற்ற உறுப்புக்களுக்கு எதிரானதாகிவிட்டது. நாவினால் பேச முடியும் ஆனால் உடலின் மற்ற பகுதிகளால் பேச முடியாது. இவ்விதத்தில் நாவு மற்ற உறுப்புக்களுக்கு எதிரானதாகிவிட்டது. இவ்வாறாக மனிதன் ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்ட குணாதிசயங்களைக் கொண்ட உறுப்புகளால் ஆன படைப்பாக இருக்கிறான்.

அல்லாஹ் இந்த எதிரெதிரானவற்றின் சேர்க்கைக்கு ஒரு மாபெரும் உபகாரத்தை மையக் காரனியாக ஆக்கினான். அதற்கே உயிர் என்று அழைக்கப்படும். அந்த உயிரானது இந்த உறுப்புகள் அனைத்தையும் ஒன்றாக்குகிறது. அவற்றுக்கிடையே தொடர்புகளை உருவாக்கு கிறது. அவற்றை ஒன்றிணைக்கிறது. அதன் காரணமாகவே இந்த உறுப்புகள் அனைத்தும் ஒரே அமைப்பாக செயல்படுகின்றன. உடலில் ஆன்மா என்ற ஒன்று இருக்கும் வரை உடல் உறுப்புகள் அனைத்தும் ஒன்றாக வேலை செய்கின்றன.

தலைவலி ஏற்பட்டால் கால்கள் மருத்துவரிடம் செல்ல மறுக்காது. இது என்னுடைய பிரச்சனை இல்லை. இது தலையின் பிரச்சனை என்று சொல்லாது. தலைவலி இன்னும் கடுமையாக இருந்தால் உடல் முழுவதும் வலிப்பதைப் போன்று இருக்கும். முழு உடலும் அமைதியற்றதாகி விடும். கால்கள் மருத்துவரிடம் நடந்து செல்லும். இன்னும் வலி கடுமையாக இருந்தால் கண்கள் கண்ணீரை வடிக்கும். மேலும் முழு உடலும் துடிதுடித்துப் போய்விடும். இதன் காரணமாக தூக்கம் கூட வராது. ஒரு உறுப்பின் துக்கம் முழு உடலின் துக்கம். ஒரு உறுப்பின் மகிழ்ச்சி முழு உடலின் மகிழ்ச்சி என்பது போல இவை அனைத்தும் அமைந்திருக்கும்.

இந்த உறுப்புகள் அனைத்தும் ஒன்றாக மாறியதே இதற்கான காரணமாகும். இப்போது அவை ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டுள்ளன.

அவை ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்டுள்ளன. அதாவது உயிரானது அவை அனைத்தையும் ஒன்றி ணைத்துள்ளது. உதாரணமாக உயிர் உடலிலிருந்து அகற்றப்பட்டால் அனைத்து உறுப்புகளும் ஒன்றுக் கொன்று அந்நியமாக மாறுவதை நீங்கள் காண் பீர்கள். உயிர் யாருடைய உடலை விட்டுச் சென்றுவிட்டதோ அவருடைய நாக்கை கத்தியால் இரண்டு துண்டுகளாக வெட்டினால் அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் வராது. அவரைப் பாதுகாக்க அவரது கரங்கள் விரையாது. அவரது கால்கள் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஓடாது. ஏனென்றால் அவை அனைத்தும் ஒன்றுக்கொன்று அந்நியமாகிவிட்டன.உடலுறுப்புக்கள் அனைத்தை யும் ஒருங்கிணைத்திருந்த ஒன்று அவ்வுடலை விட்டும் வெளியேறிச்சென்றதே இதற்குக் காரணமாகும்.

# குடும்ப வாழ்வில் எதிரெதிரானவைகளின் சேர்க்கை

இந்த உதாரணத்தை மனதில் கொண்டு நம் வீடுகளைப் பார்த்தால் நமது இல்லங்கள் அந்தஸ்தில் ஒருவருக்கொருவர் முற்றிலும் வேறுபட்டமக்களின் தொகுப்பாக இருப்பதைக் காணலாம். உதாரணமாக ஒரு தந்தையின் அந்தஸ் திற்கு ஈடாக வீட்டிலுள்ள வேறு எந்த உறுப்பினரின் அந்தஸ்தும் இருக்க முடியாது. இவ்வகையில் அவர் மற்றவர்களிலிருந்து மாறுபட்டவர். அவ்வாறே ஒரு தாயின் தரத்திற்கு ஈடாக வேறு யாருடைய தரமும் இருக்க முடியாது. அவ்வாறே ஒரு சகோதரன் மற்றும் சகோதரியின் தகுதியை ஈடு செய்ய எவராலும் முடியாது. ஆக ஒவ்வொருவருக்கும் அவரவருக்கென தனி அந்தஸ்து உண்டு.

இவ்விதமாக அவர்கள் அனைவரும் தங்களுக்குரிய அந்தஸ்தில் ஒருவருக்கொருவர் எதிரானவர்களாக உள்ளனர். ஆனால் சர்வவல்ல மையுள்ள அல்லாஹ் அவர்களுக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்த ஒரு மாபெரும் பாக்கியத் தை வழங்கியுள்ளான். அதன் காரணமாக உயிர் இருந்தால் எவ்வாறு உடலின் அனைத்து

பாகங்களும் ஒன்றாக இணைந்து வேலை செய்கின்றனவோ அவ்வாறே இவர்கள் அனை வரும் ஒன்றாக இணைந்து வேலை செய்கிறார்கள். அப்பேற்பட்ட ஒரு மாபெரும் பாக்கியத்தைத் தான் இஸ்லாம் என்ற பெயரில் அறியப்படுகிறது.

வீட்டின் அனைத்து உறுப்பினர்களிடமும் தீன் இருக்கும் வரை அவர்களிடையே பாசம், அன்பு போன்றவை இருக்கும். அனுதாபம், தியாகம் போன்றவை இருக்கும். ஒரு நபரின் துக்கம் முழு குடும்பத்தின் துக்கமாக, ஒரு நபரின் மகிழ்ச்சி முழு குடும்பத்தின் மகிழ்ச்சியாக பார்க்கப்படும். எல்லோரும் ஒருங்கிணைந்து பங்காற்றுவார்கள்.

ஒரு வேளை அவர்களிடம் தீன் இல்லை யானால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் குடும்ப உறுப்பினர்கள் ஒருவருக் கொருவர் அந்நியர்களாக இருப்பதை நீங்கள் காண்பீர்கள். அவர்களின் இதயங்களில் அன்பு,பாசம் போன்றவை இருக்காது. மாறாக பகை, வெறுப்பு மற்றும் காழ்ப்புணர்ச்சி குடி கொண்டிருக்கும். அவர்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவதைக் கூட விரும்பமாட்டார்கள்.

ஒரு நபரின் உடலை விட்டு உயிர் பிரிந்து விட்டபின் அவருடைய வாயைப் பொத்திக் கொண்டு மூக்கு வழியாக அவரது உடலுக்குள் காற்று செலுத்தப்பட்டால், என்ன அவர் உயிர் பெற்று எழுவாரா? என்றால் அவர் ஒரு போதும் உயிர் பெறமாட்டார். அதேபோல்,

ஒருவரின் வீட்டிலிருந்து இஸ்லாமிய போதனை கள் தூரமாக்கப்பட்டு, மனிதனால் உருவாக்கப்பட்ட செயற்கையான கொள்கைகள் அதில் அறிமுகப் படுத்தப்பட்டால், அதே அன்பும், பாசமும் குடும்பத் திற்குள் ஏற்படுமா? என்றால் அது ஒருபோதும் ஏற்படாது. உயிர் உடலை உயிர்ப்பாக வைத்திருப் பது போல, தீன் என்பது நம் குடும்ப உறுப்பினர்களின் வாழ்வை உயிரோட்டமாக வைத்திருக்கும் அடிப் படை மூலமாகும். இதன் மூலமே அக்குடும்பத்திற்கு உயிருள்ள குடும்பம் என்று சொல்லப்படும்.

உடலில் இணைந்துள்ள கை நான் உடலுடன் பிணைக்கப்பட்டுள்ளதால் என் விருபப்படி செயல்பட முடியவில்லை, எனவே நான் உடலிலிருந்து பிரிந்தால், என் சொந்த விருப்பத்தின் சுதந்திரமாகி படி செயல்படுபவனாக மாறுவேன் என்று எண்ணினால் அப்போது அந்தக் கையுடைய இந்த எண்ணம் சரியானதா? நிச்சயமாக இல்லை. ஏனெனில் அதன் வாழ்க்கை உடலுடன் சேர்ந்திருப்பதில் தான் உள்ளது. அது உடலிலிருந்து பிரிந்து விட்டால், உயிரற்றதாகிவிடும். பின்னர் புழுக்கள் அதை அரித்துவிடும். பின்னர் தெரு நாய்கள் அதை கடித்து திண்றுவிடும்.

அதேபோல், ஒரு இளைஞன் தன் பெற்றோருடன் கூட்டுக்குடும்பமாக வசிக்கும் போது தான் அடிமைப்பட்டிருப்பதாக எண்ணி தனி வாழ்க்கை வாழ விரும்பி தன் முழு குடும்பத்திலிருந்தும் பிரிந்து விட்டால் அவனுக்கும் அதே நிலை தான் ஏற்படும். சைத்தானின்

வடிவத்தில் சுற்றித் திரியும் மக்கள் அவனை தெருக்களில் இழுத்துச் செல்வார்கள். இறுதியில் அவனுக்கு உடலிலிருந்து பிரிக்கப்பட்ட கைக்கு ஏற்பட்ட அதே கதிதான் ஏற்படும்.

# இரு பொருட்களை இணைப்பதற்கான விதிமுறைகள்

நான் இதையே வேறொரு கோணத்தில் உங்களுக்கு முன்வைக்கிறேன். இரு பொருட்களை இணைக்க, சர்வவல்லமையுள்ள அல்லாஹ் இந்த உலகில் மூன்றாவது ஒன்றைப் படைத்துள்ளான். எடுத்துக்காட்டாக;

இரண்டு செங்கற்களை இணைக்க அல்லாஹ் சிமெண்டை காரணமாக்கியுள்ளான். இந்த சிமெண்டைப் பூசினால், இரண்டு செங்கற்களும் ஒன்றாகிவிடும். அவற்றைப் பிரிக்க முயற்சித்தால் முழுமையாக ஒன்றையொன்று பிரிக்க முடியாமல் அவை உடைந்துவிடும். அவ்வாறே இரண்டு காகிதத் துண்டுகளை ஒன்றாக இணைக்க விரும்பினால், அங்கு சிமெண்ட் பயன்படாது. இந்த நோக்கத்திற்காக நீங்கள் பசையைப் பயன்படுத்தினால், இரண்டு காகிதத் துண்டுகளும் ஒன்றோடு ஒன்று இணைந்துவிடும்.

இரண்டு துணித்துண்டுகளை இணைக்க வேண்டியிருந்தால், சிமெண்டோ அல்லது பசையோ அங்கு பயன்படாது. அதற்கு பதிலாக, நீங்கள் ஒரு ஊசி மற்றும் நூலைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். ஒரு ஊசி மற்றும் நூலைப்

பயன்படுத்துவதன் மூலம், இந்த இரண்டு துணித் துண்டுகளும் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரே துணியாகவே மாறிவிடும்.

இரண்டு மரத்துண்டுகளை இணைக்க விரும்பினால், சிமென்ட் அல்லது நூலைப் பயன் படுத்த முடியாது.அல்லாஹ் அதற்குத்தான் ஆணியைப் படைத்துள்ளான். நீங்கள் அதில் ஒரு ஆணி அடித்தால், இரண்டு மரத்துண்டுகளும் ஒன்றாகிவிடும். இரண்டு இரும்புத் துண்டுகளை இணைக்க விரும்பினால், அல்லாஹ் வெல்டிங் முறையைக் கற்றுத் தந்துள்ளான். அவற்றை ஒன்றாக வெல்ட் செய்தால் அவை இணைந்துகொள்ளும்.

## இஸ்லாமிய மார்க்கத்தின் மூலமே இரண்டு இதயங்களின் இணைப்பு சாத்தியப்படும்

இரண்டு பேரின் இதயங்கள் ஒன்றாக இணைய அல்லாஹ் எதைப் படைத்துள்ளான் என்ற கேள்வி எழுந்தால், அதற்கு இஸ்லாமிய மார்க்கம் என்பதே சரியான பதிலாக இருக்கும். இரண்டு நபர்கள் தீனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பார்களேயானால் அல்லாஹ் அவர்களின் உள்ளங்களில் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் பாசத்தையும், அன்பையும் ஏற்படுத்துவான். புனித குர்ஆனில் இக்கருத்து கூறப்பட்டுள்ளது:

إِنَّ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ سَيَجْعَلُ لَهُمُ الرَّحْمَٰنُ وُدًّا

நிச்சயமாக, நம்பிக்கை கொண்டு நல்லறங்கள் செய்பவர்களின் உள்ளங்களை அல்லாஹ் அன்பினால் நிரப்புவான். (ஸூரா மர்யம்–19:96)

## வெறுப்புக்கள் எப்போது எழுகின்றன?

மார்க்கத்தைப் பின்பற்றுவதில் கவனக்குறைவு ஏற்படும் போது, நாம் பெயரளவில் மட்டுமே மார்க்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு, நம் சொந்த விருப்பங்களைப் பின்பற்றும் போது வெறுப்புக்கள்

எழுகின்றன. பிறகு, நம் இதயங்களில் ஒருவருக் கொருவர் எவ்வாறான அன்பு, பிணைப்பு இருக்க வேண்டுமோ அவ்வாறான அன்பு இருக்காது.

وَأَلَّفَ بَيْنَ قُلُوبِهِمْ ۚ لَوْ أَنفَقْتَ مَا فِى ٱلْأَرْضِ جَمِيعًا مَّآ أَلَّفْتَ بَيْنَ قُلُوبِهِمْ وَلَـٰكِنَّ ٱللَّهَ أَلَّفَ بَيْنَهُمْ ۚ إِنَّهُۥ عَزِيزٌ حَكِيمٌ

அல்லாஹ் கூறுகிறான், என் அன்பானவரே, பூமியில் உள்ள அனைத்து பொக்கிஷங்களையும் நீங்கள் செலவழித்தாலும், இந்த மக்களின் இதயங்களில் அன்பை உங்களால் உருவாக்க முடியாது. மாறாக அல்லாஹ் தான் அவர்களின் இதயங்களில் அன்பை உருவாக்கியுள்ளான்.

(ஸூரத்துல் அன்ஃபால்–8:63)

எனவே, தீனுடைய சட்டங்களைப் பேணுதலாக கடைப்பிடிக்கப்படும் இடத்தில், மக்களின் இதயங்களில் ஒருவருக்கொருவர் அன்பு, பாசம் மற்றும் அனுதாபம் போன்றவை ஏற்படும் என்பது உறுதியானதாகும். தீனைக் கடைப்பிடிக்கப்படும் ஒரு வீட்டில், அந்த வீட்டின் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் மிகவும் நெருக்கமாக இணைந்திருப்பார்கள்.

பின்னர் "ஹஜ்ரத்! என் மகன் ஏன் என்னுடன் மேஜையில் அமர்ந்து சாப்பிடுவதில்லை என்று எனக்குத் தெரியவில்லை. ஹஜ்ரத்! என் பிள்ளைகளுக்காக துஆ செய்யுங்கள். அவர்கள் தான்தோன்றிகளாகிவிட்டார்கள். அவர்களுக்குள்

ஒருவருக்கொருவர் ஒத்துப்போகவில்லை" என்று தற்போதைய தந்தைமார்கள் புலம்புவது போல் நடக்காது.

அவர்களுக்குள் ஒருவருக்கொருவர் ஒத்துப் போகவில்லை என்றால் எங்காவது ஷரியத் மற்றும் சுன்னத்தைப் பின்பற்றுவதில் ஏதோ ஒரு குறைபாடு ஏற்பட்டுள்ளது என்று அர்த்தமாகும். கட்டாயம் ஏதோவொரு தவறு இருந்தே தீரும்.

அதனால்தான் இருக்க வேண்டிய அன்பு இருப்பதில்லை. நான் எதிர்பார்க்கும் அன்பை மனைவி எனக்குக் கொடுக்கவில்லை என்று கணவர் சொல்கிறார். நான் எதிர்பார்க்கும் அன்பை என் கணவர் எனக்குக் கொடுக்கவில்லை என்று மனைவி சொல்கிறாள் என்றால் இருவருக்கும் இடையே தீனைப் பின்பற்றுவதில் சிற்சில குறைகள் உள்ளன என்று அர்த்தம். இரு தரப்பினரும் தீனை முழுமையாகப் பின்பற்றினால், இதயங்களில் பாசமும், அன்பும் நிச்சயம் உண்டாகும்.

# இஸ்லாமிய மார்க்கம் எதிர்பாராத ஒரு வரப்பிரசாதமாகும்

இம் மார்க்கம் எல்லாம் வல்ல அல்லாஹ்ற விடமிருந்து கிடைத்த ஒரு அருட்கொடை.

அல்லாஹ்ற கூறுகிறான்;

الْيَوْمَ أَكْمَلْتُ لَكُمْ دِينَكُمْ وَأَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِي

"இன்றைய தினம் உங்கள் மார்க்கம் உங்களுக்குப் பரிபூரணமாக்கப்பட்டு விட்டது; மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன்."

எனவே இஸ்லாமிய மார்க்கம் அல்லாஹ்றவின் அருளால் அருளப்பட்டது. அதுவே வாழ்வதற்குச் சிறந்த வழி. உலகில் வாழ்வதற்கு இதைவிடச் சிறந்த வேறு வழி எதுவும் இருக்க முடியாது.

செல்வத்தாலும் பணத்தாலும் ஒருவரின் (அடிமையின்) உடலை வாங்க முடியும், ஆனால் ஒருவரின் (சுதந்திரமானவரின்) இதயத்தின் அன்பை வாங்க முடியாது. செல்வத்தால் ஒருவரை பணியவைக்கலாம், ஆனால் உள்ளத்தின் பாசத்தை வாங்க முடியாது. இதயத்தின் இந்த அன்பும், விருப்பமும் தீனுடன் தொடர்புடையதாகும். தீனைக் கடைப்பிடிக்கப்படும்போது, அல்லாஹ்ற இதயங்

களை அன்பால் நிரப்புவான். மேலும் இதயங்கள் அன்பால் நிரப்பப்படும்போது, இந்த உலக வாழ்க்கை சொர்க்கத்தின் முன்மாதிரியாக மாறிவிடும்.

இன்றைய உலகில் நாகரிகங்களின் மோதல் நடப்பதாக நீங்கள் அடிக்கடி கேள்விப் படுகிறீர்கள். இதன் அர்த்தம் என்ன? ஒரு பக்கம் இஸ்லாமியமார்க்கம். அது மக்களுக்கு ஒரு செம்மையான வாழ்க்கை முறையைச் சொல்கிறது, மறுபுறம், குஃப்ர் என்ற இறை நிராகரிப்புக் கொள்கை. அது மக்களுக்கு மனிதனால் உருவாக்கப்பட்ட சட்டங்களைக் கொண்ட ஒரு வாழ்க்கை முறையைச் சொல்கிறது. இந்த இரண்டு வாழ்க்கை முறைகளும் ஒன்றுக்கொன்று மோதுவதாக மக்கள் நினைக்கிறார்கள்.

நீங்கள் அதை எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம். ஆனால் உண்மை என்ன வென்றால், தற்போதுமுழு உலகிலும் இரண்டு வாழ்க்கை முறைகள் மட்டுமே காணப்படுகின்றன. ஒன்று, எல்லாம் வல்ல அல்லாஹ்வினால் தேர்ந்தெடுக்கப்பட்ட, முஸ்லிம்கள் ஏற்றுக்கொண் டுள்ள ஒரு வாழ்க்கை முறை. அந்த வழிமுறை அல்லாஹ்வின் நேசரால் கொண்டு வரப்பட்டது. அது இம்மையிலும், மறுமையிலும் மக்களுக்கு வெற்றியை உறுதி செய்யும் ஒரு வாழ்க்கை முறையாகும்.

இரண்டாவதாக, காஃபிர்கள் 'வெற்றி மற்றும்

சோதனை' முறை மூலம் அவர்கள் தமக்குத் தாமே வகுத்துக் கொண்ட வாழ்க்கை முறை. அதாவது அவர்களின் மனதில் தோன்றிய யூகங்கள் அடிப்படையில் சில விதிகளை உருவாக்கிக் கொண்டு வாழும் வாழ்க்கை முறை. இது போன்ற கற்பனையான கம்பங்களின் மீது அமைக்கப்படும் கூடாரம் முதல் கோணல் முற்றிலும் கோணல் என்ற அமைப்பில் பலவீனமானதாகவே இருக்கும்.

## தங்கத்தை பித்தளை என்று அல்ல, தங்கம் என்று நினைத்துப் பாருங்கள்

இங்கே எழுதப் படிக்கத் தெரிந்த கல்விமான்களில்பலர் அமர்ந்துள்ளீர்கள். அல்லாஹ் உங்களுக்கு அபரிமிதமான அறிவாற்றலை கொடுத்திருக்கிறான். உங்களிடம் உலகக் கல்வி இருக்கிறது. நீங்கள் கல்வி, அனுபவத்தில் முதிர்ந்த வர்களாக உள்ளீர்கள். நீங்கள் சமூகத்தின் பொறுப்புள்ளவர்களாக இருக்கிறீர்கள். இஸ்லாமிய மார்க்கம் பற்றிய ஏதேனும் விஷயம் நம் முன் வரும்போது, நாம் நம்மை முஸ்லிம்கள் என்று சொல்வதைக் கூட விரும்பாமல் தாழ்வு மனப்பான்மையால் அமைதிகாத்துவிடுகிறோம் என்பது பெரும்பாலும் அறிய முடிகிறது.

அவ்வாறல்லாமல் இன்று நாம் இதைப் பற்றி சற்று சிந்திக்க வேண்டும். இஸ்லாமிய மார்க்கம் என்பது அல்லாஹ்விடமிருந்து நமக்குக் கிடைத்த மிகப் பெரிய பாக்கியமாகும். நாம் இஸ்லாம் என்ற தங்கத்தை நம் கைகளில் வைத்திருக்கிறோம் என்ற உறுதியான நம்பிக்கை நமக்கு வர வேண்டும். இறைமறுப்பாளர்கள் தங்களது பலத்தைப்பயன் படுத்தி அதை பித்தளை என்று காட்ட முயற்சி

செய்கிறார்கள். அது ஒரு போதும் நடக்காது.

பலவீனமாக இருப்பது வேறு விஷயம், கையில் தங்கம் இருப்பது வேறு விஷயம். ஆனால் குறைந்தபட்சம் நாம் அதை ஒரு மதிப்புமிக்க தங்கம் என்றாவது கருத வேண்டுமல்லவா!. நாம் அதை மதிப்பான ஒன்றாக கருதவில்லை என்றால், நம்மில் உள்ள முஸ்லிம்களே நாம் இப்படியொரு வாழ்க்கை முறையை தேர்ந்தெடுத்துவிட்டோம் என்று இஸ்லாத்தின் மீதே வெறுப்பு கொண்டவர்களாக ஆகிவிடுவார்கள்.

எனவே உங்கள் வாழ்க்கை முறைகளை ஒப்பிட்டுப் பார்க்க நீங்கள் அடிப்படையாகக் கருதக்கூடிய சில விஷயங்களை இன்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். தயவுசெய்து கவனம் செலுத்துங்கள்.

## இறைநம்பிக்கைப் பற்றிய கண்ணோட்டம்

இஸ்லாமிய மார்க்கம் நமக்கு அல்லாஹ்வை நம்பவேண்டும் என்றுகற்றுக்கொடுக்கிறது.நம்மைப் படைத்து, பரிபாலிக்கும் ஒருவன் உள்ளான் என்ற சிந்தனையை நமக்கு ஏற்படுத்துகிறது. அவனே நம்மைப் படைத்தான். நாம் நியாயத்தீர்ப்பு நாளில் அவனுக்கு முன்பாக நிற்க வேண்டும் என்றும் அது நமக்குக் கற்பிக்கிறது. நாம் நன்மை செய்தால், நமக்கு வெகுமதி கிடைக்கும், தீமை செய்தால், நியாயத்தீர்ப்பு நாளில் நாம் தண்டிக்கப்படுவோம். இது மிக அற்புதமான கோட்பாடாகும். ஏனெனில் மனித வாழ்வின் மிக முக்கியப் பிரச்சினைகள் அனைத்தும் இந்தக் கோட்பாட்டின் மூலம் தீர்க்கப்படுகின்றன.

## பதற்றத்திலிருந்து நிவாரணம்

இப்போது இதைக் கவனியுங்கள்; ஒரு இளம் பெண் அவளுக்கு 22 வயதில் திருமணம் நடந்தது. திருமணமான சில மாதங்களுக்குப் பிறகு, அவளுடைய கணவர் விபத்தில் சிக்கி இறந்துவிட்டார். இப்போது அவள் இளம் வயதிலேயே விதவையாகிவிட்டாள். இந்த வயதில் விதவையாக ஆகுவதை விட அவள் வாழ்க்கையில் வேறு பெரிய

துன்பம் எதுவும் இருக்க முடியாது.

ஆனால் அவள் ஒரு முஸ்லிமாக இருந்ததால், அவளுடைய கணவர் இறந்துவிட்டார் என்று நீங்கள் அவளிடம் சென்று வருத்தப்பட்டு ஆறுதல் கூறினால், அவள் உடனடியாக, "ஆம், அல்லாஹ் என்ன விரும்புகிறானோ அது நடந்தே தீரும்" என்று பதிலளிப்பாள். அந்தப் பெண் உடனடியாக, "அல்லாஹ் என்ன விரும்புகிறானோ அதுவே நடக்கும்" என்று பதிலளிப்பதின் மூலம் அவள் தன் முழு சுமையையும் வேறொருவருக்கு மாற்றிவிட்டாள் என்று அர்த்தம். எனவே, அவளது மனதில் எந்த சுமையும் இருக்காது. ஒரு இறை நம்பிக்கை அற்றவருக்கு இருக்கும் பதற்றமும், துக்கமும் இவளிடம் இருக்காது.

## நியூயார்க்கில் 700 பைத்தியக்கார விடுதிகள் உள்ளன!

ஒரு முறை வெளிநாட்டவர் ஒருவர் பாகிஸ்தானில் எத்தனை மனநல மருத்துவமனைகள் உள்ளன என்று என்னிடம் கேட்டார். நான் இரண்டு, நான்கு அல்லது ஐந்து இருக்கும் என்று சொன்னேன். அதிகபட்சமாக பத்து இருக்கும் என்றேன். அவை எந்த நகரத்தில் உள்ளன, எந்த நகரத்தில் இல்லை என்பது கூட எங்களுக்குத் தெரியாது என்றேன். அதற்கு அவர் கூறினார், "ஒரே ஒரு நியூயார்க் நகரத்தில் மட்டும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் 700 மருத்துவமனைகள் அல்லது மருத்துவ சிகிச்சை மையங்கள் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

ஒரு நகரத்தில் மட்டும் 700 மனநல மருத்துவமனைகள் உள்ளன. ஆனால் நம் நாட்டில் ஐந்து அல்லது பத்து கூட இல்லை என்பதைக் கேள்விப்பட்டு நான் ஆச்சரியப்பட்டேன். அவர் "இந்த வித்தியாசம் ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார். நான், "தெரியாது" என்றேன். அவர் கூறினார், "நாம் முஸ்லிம்களாக இருக்கிறோம்.

நம்மிடம் அல்லாஹ்வைப் பற்றிய நம்பிக்கை உள்ளது. எனவே நாம் சந்திக்கும் அனைத்து பிரச்சினைகளையும் இது அல்லாஹ்வின் விருப்பம் என்று அவனிடம் ஒப்படைத்து விடுகிறோம். ஆனால் அங்கே, அந்த கருத்தோட்டம் இல்லை. எனவே அங்கே இது போன்ற பிரச்சினைகள் சகஜமாக எழுகின்றன. அங்கே ஒரு நபரின் வணிகம் தோல்வியடையும் போது, அவர் "ஓ, நான் விளம்பரத்தை சரியாகச் செய்யவில்லை. நான் சந்தைப்படுத்தலில் கவனம் செலுத்தவில்லை" என்று நினைக்கிறார். நான் இந்த இடத்தில் ஒரு தவறு செய்துவிட்டேன், அந்த இடத்தில் ஒரு தவறு செய்து விட்டேன் என்று புலம்பியவாறு முழு சுமையையும் தன் தலை மீது ஏற்றிக் கொள்கிறார். இவ்வாறான தொடர் மன பதற்றத்தின் காரணமாக, அவர் பைத்தியமாகிவிடுகிறார். எனவே, அங்கே மக்கள் பைத்தியமாகும் விகிதம் மிக அதிகமாகி, ஒரே நகரத்தில் 700 மனநல மருத்துவமனைகள் இருப்பது அவசியமாக ஆகிவிட்டது."

இது எவ்வளவு பெரிய பாக்கியம் என்று பாருங்கள். இங்கே முஸ்லிமானவர்களிடம் ஒருவருக்கு ஏதாவதொரு பிரச்சனை ஏற்பட்டாலோ அல்லது ஒருவருடைய மிக நேசமானவர் இறந்துவிட்டாலோ, ஆம், இது அல்லாஹ்வின் விருப்பம் என்று கூறி சகஜமாக நகர்ந்து விடுகின்றனர். "இது அல்லாஹ்வின் விருப்பம்" என்று அவர்கள் கூறும்போது, அவர்களிடமிருந்த அனைத்து சுமைகளும் வேறு இடத்திற்கு

மாற்றப்படுகின்றன. இவ்வாறாக இறை நம்பிக்கை என்ற மாபெரும் பாக்கியம் ஒரு நபரை பைத்தியம் பிடிப்பதிலிருந்து காப்பாற்றியுள்ளது.

# அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பதன் பலன்

இந்த ஈமானுடைய பாக்கியம் ஒரு அடியானை நற்பேற்றுடன் வாழக் கற்றுக்கொடுக்கிறது. ஒரு முறை அமெரிக்காவில் உள்ள ஒரு மாநிலத்திற்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அங்கிருந்த ஒரு முக்கியமான இமாம் மற்றும் போதகருடன் நாங்கள் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்போது அவர் நான் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் இங்குள்ள சிறைக்குச் சென்று அங்குள்ள மக்களை இஸ்லாத்தின் பால் அழைக்கிறேன் என்று என்னிடம் கூறினார். அதற்குக் காரணம், அங்குள்ள குற்ற மனப்பான்மை, பாவ சிந்தனை கொண்ட மக்கள் தண்டனைகளால் சரியாகுவதில்லை என்று உள்ளூர் அரசாங்கம் கருதுகிறது.

ஆம், அவர்களில் யாராவது இஸ்லாதிற்கு மாறி விட்டால், அவர்களின் வாழ்க்கை மாறிவிடுகிறது. எனவே, இந்த குற்றவாளிகள் நல்ல குடிமக்களாக தங்கள் வாழ்க்கையைத் தொடர, அவர்கள் விரும்பும் மதத்தைச் சார்ந்த போதகர்கள் வந்து அவர்களுக்கு போதனை செய்வதற்கு அரசாங்கம் முழு அனுமதி அளித்துள்ளது. நான் அவரிடம்

உங்களது இந்த அழைப்புப் பணியில் நீங்கள் சந்தித்த ஒரு சுவாரஸ்யமான சம்பவத்தைப் பற்றிச் சொல்லுங்களேன் என்றேன். அவர், "ஹஜ்ரத், நேரம் போதாத அளவு சுவாரஸ்யமான பல சம்பவங்கள் உள்ளன. இப்போதோ தொழுகைக்கான நேரம் நெருங்கி விட்டது. பிறகு தாங்கள் பயான் செய்ய வேண்டியுள்ளது. எனவே, இந்த ஒரு சம்பவத்தை மட்டுமே நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

ஒரு முறை ஒரு குற்றவாளி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். நான் அவரிடம் இஸ்லாமிய மார்க்கத்தைப் பற்றிப் பேசினேன். அதனால் அவர் சில நாட்களிலேயே முஸ்லிமாகிவிட்டார். நான் அவருக்கு அலி என்று பெயரிட்டேன். பிறகு நான் அவருக்கு மார்க்கத்தின் அடிப்படைகளைக் கற்றுக் கொடுத்தேன். நாளடைவில் நாங்கள் ஒருவரையொருவர் மிகவும் நேசிக்க ஆரம்பித்தோம். நாங்கள் மிகவும் நெருக்கமாகிவிட்டோம். சில மாதங்களுக்குப் பிறகு, எங்கள் தனிப்பட்ட விஷயங்களையும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தோம். ஒரு நாள், நான் அவரிடம் "சகோதரர் அலியே, இஸ்லாத்திற்கு மாறுவதற்கு முன்பும் பின்பும் உங்கள் வாழ்க்கையில் என்ன மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன" என்று கேட்டேன். இந்தக் கேள்வியைக் கேட்டதும், அவர் கண்களில் இருந்து கண்ணீர் வழியத் தொடங்கியது. இந்தக் கேள்வியை நான் அவரிடம் கேட்டிருக்கக் கூடாது

என்று எனக்குத் தோன்றியது.

அதனால், நான் அவரை ஆறுதல்படுத்தி, "உன்னுடைய மனோ நிலை சரியில்லை என்றால், நிச்சயமாக அதைப் பற்றி பேச வேண்டாம்" என்றேன். அவர், "இல்லை, நான் உங்களுக்கு அதை கட்டாயம் சொல்கிறேன். இஸ்லாத்திற்கு மாறுவதற்கு முன்பு, நான் ஒரு மனநோயாளியாக, நான் ஒரு காட்டுமிராண்டியாக இருந்தேன். மாறாக, நான் மனித உருவில் உலாவக்கூடிய மிருகமாக இருந்தேன். மற்ற மனிதர்களைக் கொலை செய்வதை நான் ரசித்தேன். அவர்களின் உடல்கள் வேதனையில் துடிக்கும் போது நான் நடனமாடுவேன்.

நான் இந்த முறை ஒரு சிறிய குற்றத்தின் காரணமாக கைது செய்யப்படுள்ளேன். எனவே சில மாதங்களுக்குப் பிறகு விடுதலையாகி நான் திரும்பிச் செல்வேன். உண்மை என்னவென்றால், நான் 36 மனிதர்களை எந்த காரணமும் இல்லாமல் கொன்றுள்ளேன். எனக்கு வாய்ப்பு கிடைத்த போதெல்லாம், நான் மக்களைக் கொலை செய்தேன். அவர்கள் வேதனையில் இருப்பதைப் பார்த்து ரசித்தேன். இவ்வாறாக நான் மிகுந்த மனநலம் பாதிக்கப்பட்டவனாக இருந்தேன்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நான் கொலை வழக்குகள் எதிலும் சிக்கவில்லை. இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன்பு எனது நிலை

இதுதான். இஸ்லாத்தைத் தழுவிய பிறகு, நீங்கள் எனக்கு அல்லாஹ்வைப் பற்றிய சிந்தனையை ஏற்படுத்தினீர்கள். நீங்கள் எனக்கு நியாயத்தீர்ப்பு நாள் உண்டு என்ற நம்பிக்கையை விதைத்தீர்கள். நியாயத்தீர்ப்புநாளில்,ஒருநபருடையவாழ்க்கையின் செயல்கள் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்படும் என்று சொன்னீர்கள்.

இந்தக் கருத்து தான் என் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. நான் என் அறையிலிருந்து வெளியே வரும்போதெல்லாம், ஒரு எறும்பு கூட என் கால்களில் மிதிபட்டு இறந்துவிடக் கூடாது என்று தற்போது எண்ணுகிறேன். இதுதான் இஸ்லாமிய சிந்தனை. இது தான் இஸ்லாம் ஏற்படுத்திய தாக்கம் என்றார்."

இறை நிராகரிப்பாளாராக இருந்த போது 36 அப்பாவி மக்களைக் கொன்றவர் இஸ்லாமியராக மாறிய பின் ஒரு எறும்பு இறப்பதைக் கூட பயப்படுகிறார். இது எவ்வளவு பெரிய பாக்கியம் பாருங்கள். இதுவே இஸ்லாத்தின் பலனும், விளைவுமாகும்."

## பெற்றோர்கள் பற்றிய கருத்தோட்டம்

இது 1972–ல் நடந்த நிகழ்வு. எங்களுக்கு டாக்டர் இக்பால் அலி என்ற பேராசிரியர் பாடம் நடத்தினார். ஒரு முறை, அவர் எங்களுக்கு சிவில் இன்ஜினியரிங் குறித்து விரிவுரை ஆற்றிக் கொண்டிருந்தார். அவர், கூறினார் "நான் இங்கிலாந்தில் முனைவர் பட்டம் பெற்றேன். அங்கிருந்த போது ஒருமுறை, நான் என் நண்பர் ஒருவரின் அருகில் அமர்ந்திருந்தேன். அப்போது அவரது செயலாளர், "உங்களுக்கு மருத்துவமனையிலிருந்து அழைப்பு வந்துள்ளது" என்றுஓடிவந்துகூறினார்.இதுபோன்றநேரத்தில்நம் மனநிலை என்னவென்றால், மருத்துவமனையின் பெயர் வந்தவுடன், உடனடியாக என்ன நடந்தது என்று கேட்க எண்ணுவோம்.

அதன்படி அவருக்கு மறுபடி போன் அழைப்பு வந்ததும், நான் அவரிடம், "என்ன நடந்தது?" என்று கேட்டேன். அவர், "இல்லை, அப்படியொரு பெரிய விஷயம் எதுவுமில்லை" என்றார். பின்னர் நான், "மீண்டும் சொல்லுங்கள்" என்று கேட்ட போது "என் தந்தை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் தற்போது இறந்துவிட்டதாக மருத்துவர்களிடமிருந்து எனக்கு

அழைப்பு வந்தது. அவரே இறந்துவிட்டார். இப்போது என்ன செய்ய முடியும்  சொல்லுங்கள்" என்று மிக அலட்சியமாகக் கூறினார்.

"பிறகு அதே தொலைபேசி வழியாக, அவருடைய உடலை இறுதிச் சடங்கு செய்யும் நிறுவனத்திடம் ஒப்படைத்து விடுங்கள் என்று கூறிவிட்டேன். அவர்கள் அவற்றை அடக்கம் செய்து விட்டு எனக்கு செய்தி அனுப்புவார்கள். நான் பின்னர் அதற்குரிய பணத்தை செலுத்துவேன்." என்று கூறினார். ஒரு மகன் தன் தந்தை இறந்த பிறகு அவரது முகத்தைப் பார்க்கக்கூட விரும்பாதது எனக்கு மிக ஆச்சரியமாக இருந்தது. உலக வாழ்வில் இப்படியும் ஒரு ஆபத்தான கண்ணோட்டம் உள்ளது.

# இறைமறுப்பாளர்களின் சமூகத்தில் தாயின் அந்தஸ்து

அமெரிக்காவில் உள்ள ஒரு மாநிலமான கனெக்டிகட்டில், ஒரு தாய் தனது இளம் மகன் மீது வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கு ஊடகங்களில் பிரபல்யமாகப் பேசப்பட்டது. தாய்மைக்கே இழுக்கை ஏற்படுத்திய இச்செய்தி உலகம் முழுக்க பரவியது. அந்த வழக்கில் தாய் கூறினாள் என் கணவர் இறந்துவிட்டார். நான் என் இளம் மகனுடன் வீட்டில் வசிக்கிறேன். என் மகன் ஒரு நாய் வைத்திருக்கிறான். அவன் தினமும் மூன்று முதல் நான்கு மணி நேரம் வரை அந்த நாயுடன் செலவிடுகிறான். அவன் அதைக் குளிப்பாட்டுகிறான், உணவளிக்கிறான், கால் நடையாக அழைத்துச் செல்கிறான். மூன்று முதல் நான்கு மணி நேரம் வரை அதனுடன் செலவிடுகிறான். நான் அவனுடைய தாயாக உள்ளேன். என் அறையில் தனியாக என் மகனின் முகத்தை ஒரு முறையாவது பார்க்க வேண்டும் என்று ஏங்கிக் கொண்டிருக்கிறேன். ஆனால் அவன் நாள் முழுவதும் ஒரு நிமிடம் கூட எனக்கு நேரம் ஒதுக்குவதில்லை. எனவே என் மகனை என்னுடன் சில நிமிடங்கள் உட்காரச் சொல்லி வழிகாட்ட நான் நீதிமன்றத்தை அணுகியுள்ளேன் என்றாள்.

அந்த வழக்கில் மகனுக்கும் ஒரு வழக்கறிஞர் நியமிக்கப்பட்டார். தாய்க்கும் ஒரு வழக்கறிஞர் நியமிக்கப்பட்டார். வழக்கு உள்ளூர் நீதிமன்றத்தில் நடந்தது. அங்குள்ள நீதிபதி இந்த பின்வரும்தீர்ப்பை வழங்கினார். அவளுடைய மகனுக்கு இப்போது 18 வயதிற்கு மேல் ஆகிவிட்டதால், அவன் வளர்த்தக்கூடிய நாய் அவனுடைய பொறுப்பில்உள்ளதாகும். அதாவது நாய்க்கு உணவளிப்பது, குளிப்பாட்டுவது, அழைத்துச் செல்வது மற்றும் அதைப் பாதுகாப்பது போன்ற அனைத்தும் அவனுடைய பொறுப்பாகும். அவன் தன் வீட்டில் ஒரு செல்லப்பிராணியை வளர்த்து வருவதால் இது அவனுடைய பொறுப்பில் உள்ளதாகும்.

மேலும் அவன் 18 வயதுக்கு மேல் உள்ளவன் என்பதால், அவனது பெற்றோர் அவனுடைய பொறுப்பில் உள்ளவர்கள் அல்ல. எனவே, இந்தத் தாய்க்கு தன் மகன் சம்பந்தமாக ஏதேனும் தேவை இருந்தால், அவள் அரசாங்கத்தை அணுக வேண்டும். அரசாங்கம் அவளை ஒரு முதியோர் இல்லத்திற்கு அழைத்துச் செல்லும், அங்கே அவள் பாதுகாக்கப்பாக தங்கவைக்கப்படுவாள். அவளைப் பாதுகாப்பதில் மகனுக்கு எந்தப் பொறுப்பும் இல்லை.

# இஸ்லாமிய சமூகத்தில் பெற்றோரின் அந்தஸ்து

இப்போது ஒரு சமூகம் பெற்றோரைப் பற்றிய எவ்விதமான கண்ணோட்டம் கொண்டுள்ளது என்பதையும், மறுபக்கம் பெற்றோரைப் பற்றி இஸ்லாம் எவ்விதமான கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளது என்பதையும் பற்றி சிந்தித்துப் பாருங்கள்.

ஒரு பிள்ளை தனது தாயையோ அல்லது தந்தையையோ அன்புடன் பார்க்கும்போது, அல்லாஹ் அப்பிள்ளைக்கு ஹஜ் அல்லது உம்ரா செய்ததற்கான வெகுமதியைக் கொடுக்கிறான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். "அல்லாஹ்வின் தூதரே, யாராவது அவர்களை மீண்டும் மீண்டும் பார்த்தால்?" என்று நபித்தோழர்கள் கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், "யார் அவர்களை மீண்டும் மீண்டும் பார்க்கிறாரோ, அல்லாஹ் அவருக்கு மீண்டும், மீண்டும் ஹஜ் மற்றும் உம்ராவை செய்ததற்கான வெகுமதியை வழங்குவான்" என்று கூறினார்கள்.

இப்போது யோசித்துப் பாருங்கள், நீங்கள் படித்தவர்கள். இந்த இரண்டு வகையான

சமூகங்களையும் ஒப்பிட்டுப்பாருங்கள். இஸ்லாத்தின் போதனைகள், காபிர்களின் போதனைகளுடன் எவ்வளவு தெளிவாகவும், அழகாகவும் வேறுபடுகின்றன என்பதைப் பாருங்கள்.

# திருமண வாழ்க்கைப் பற்றிய கண்ணோட்டம்

கணவன் மனைவியின் இல்லற வாழ்க்கை குறித்து இஸ்லாம் ஒரு அழகான கருத்தை வழங்கியுள்ளது. இதற்கு மாற்றமாக மற்றொரு கருத்தை குஃப்ரைத் தேர்ந்தெடுத்துள்ள சமூகம் வகுத்தளித்துள்ளது. இறைவனை மறுத்து வாழும் சமூகத்தின் பிரதான அடையாளமே தங்களுக்கு மத்தியிலுள்ள அன்பை மறந்து விடுதல் தான். அச்சமூகத்தில் ஒரு கணவன், மனைவி 22 ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்தாலும் ஒரு அற்ப விஷயத்திற்காக கணக்குப் பார்க்கும் அவலம் தான் நிலவுகிறது.

உதாரணமாக திருமணமாகி 22 ஆண்டுகள் மனைவியுடன் ஒன்றாக வாழ்ந்து வரும் கணவன் மனைவியிடம் கடன் பெற்று சிகரெட் வாங்கினால் அக்கடனைத் திருப்பி ஒப்படைக்க வேண்டும். அவ்வாறே மனைவி கணவனிடம் கடன் பெற்று சிகரெட் வாங்கினாலும் திருப்பி ஒப்படைக்க வேண்டும். 22 ஆண்டுகளுக்குப் பிறகும், கணவன் மனைவிக்கு இடையேயான உறவு அவ்வளவுதான் என்றால் சற்று கற்பனை செய்து பாருங்கள். அங்கு, கணவன் மனைவி இடையேயான பரஸ்பர பாசம்

மறைந்துவிட்டது. அதனால்தான் விவாகரத்து விகிதம் மிக அதிகமாகி, தற்சமயம் அவர்கள் திருமணம் செய்வதையே நிறுத்திவிட்டார்கள்.

## ஒரு பொறியியல் மேலாளரின் அவலநிலை

ஒருதிட்டத்தில்நான்மேலாளராகப்பணிபுரிந்து கொண்டிருந்த நேரத்தில் இது நடந்தது. நாங்கள் சில இயந்திரங்களை இறக்குமதி செய்தோம். அவற்றை அமைத்துக் கொடுக்க அதனுடன் சில பொறியாளர்களும் வந்திருந்தனர். அவர்கள் வெளிநாட்டிலிருந்து வந்ததால், அவர்களுடன் சில அவசிய ஒருங்கிணைப்புப் பணிக்காக நானும் அவர்களுடன் இணைந்திருந்தேன். ஒரு முறை நாங்கள் அமர்ந்திருந்த போது, அவர்களில் ஒருவர் உங்களுக்கு எத்தனை குழந்தைகள்? என்று கேட்டார்.நான் இத்தனை குழந்தைகள் என்று அவரிடம் கூறினேன்.

பின்னர் உங்களுடைய குடும்ப அமைப்பு என்ன? உங்களுக்கு எத்தனை குழந்தைகள்? என்று நான் திரும்ப அவரிடம் கேட்டேன். அவர், "எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை" என்றார். உங்களுக்கு எத்தனை வயதிருக்கும்? என்று கேட்டேன். அவர், "52" என்றார். நான், "திரு.மைக்கேல் அவர்களே! 52 வயது என்பது மிக நீண்ட வயதாயிற்றே. இந்த வயதில் பொதுவாக ஒருவருக்கு திருமணம் ஆகிவிடுமே, உங்களுக்கு ஏதாவது பிரச்சனையா?" என்று கேட்டேன். அதற்கு

அவர் "கடைவீதியில் பால் கிடைக்கும்போது, வீட்டில் ஏன் பசு வளர்க்க வேண்டும்?" என்று கூறினார்.

இது திருமண வாழ்க்கைப் பற்றிய மற்றொரு கண்ணோட்டம் ஆகும். அந்த சமூகத்தைச் சேர்ந்த படிப்பறிவுள்ள ஒரு பொறியாளர் இந்த வார்த்தைகளைச் சொல்கிறார். அவர் சும்மா விளையாட்டாகப் பேசுவதாகச் சொல்லி நாம் கண்டுகொள்ளாமல் இருப்பதற்கு அவர் ஒரு பாமர மனிதரல்ல. மாறாக அவர் அந்த சமூகத்தின் பொறுப்பான நபர். அப்பேற்பட்ட ஒருவரின் திருமண வாழ்க்கைப் பற்றிய கண்ணோட்டம் இது என்றால் நம்ப முடிகிறதா?.

## இன்னொரு பொறியாளரின் முட்டாள்தனம்

ஒருமுறை நாங்கள் எங்கள் தொழிற்சாலையில் ஒரு நீராவி கொதிகலன் நிறுவ இருந்தோம். அதற்காக பிரான்சிலிருந்து ஒரு பொறியாளர் இரண்டு மாதப் பணிக்காக வந்திருந்தார். ஒருமுறை அவர் எங்கள் பொறியாளர்களுடன் அமர்ந்திருந்தார். இளைஞர்கள் ஒன்றாக அமர்ந்திருந்தால் பொதுவாக அவர்கள் தங்களுக்குள் கேலி செய்வார்களல்லவா!.

அவ்வாறே ஒரு இளைஞன் நகைச்சுவையாக, "ஆம், நீங்கள் இங்கு வந்து 25 நாட்கள் ஆகிறது.

உங்களுக்கு எந்த பெண்ணுடனாவது தொடர்பு ஏற்பட்டுள்ளதா? உங்கள் மனைவி உங்களை மிஸ் செய்கிறாரா? என்று கேட்டார். அவ்வாறே, நாங்கள் நகைச்சுவையாகப் பேசிக்கொண்டிருந்தபோது, மற்றொரு இளைஞன் அவரிடம், "நீங்கள் திரும்பிச் செல்லும் வரை அவள் உங்கள் பந்தத்தில் தான் இருப்பாள் என்று உங்களிடம் உத்தரவாதம் உள்ளதா?" என்று கேட்டான். அவர் சிரித்துக்கொண்டே, "பெண்கள் பேருந்துகள் போன்றவர்கள். நீங்கள் ஒரு பேருந்தைத் தவறவிட்டால், மற்றொன்றில் ஏறிவிடுங்கள்" என்றார்.

## இஸ்லாமிய போதனைகள்

திருமண வாழ்க்கை பற்றி ஒரு பொறுப்பான நபர் இந்தக் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கிறார். இவ்விதமே கணவன் மனைவிக்கு இடையேயான உறவு அவர்களிடம் அமைந்துள்ளது. ஆனால் கணவன் மனைவிக்கு இடையே யான உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதாக இஸ்லாம் நமக்கு மிக அழகாகக் கற்றுக் கொடுத்துள்ளது. நமது மார்க்கம் நமக்கு இந்த அன்பின் உறவை எவ்வளவு அற்புதமாகக் கற்றுக் கொடுத்துள்ளது.

நன்கு கவனமாகக் கேளுங்கள், நபி ﷺ

அவர்கள் கூறினார்கள்: உங்களில் மிகச் சிறந்தவர் உங்களது குடும்பத்தினரிடம் மிகச் சிறந்தவராகத் திகழ்பவரே.

நபி ﷺ அவர்கள் மேலும் கூறினார்கள்: ஒரு கணவன் தனது மனைவியைப் பார்த்து, ஒரு மனைவி தனது கணவரைப் பார்த்து புன்னகைக்கும்போது, அல்லாஹ் இருவரையும் பார்த்து புன்னகைக்கிறான்.

திருமண வாழ்க்கையைப் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டமும், குஃப்ரைத் தேர்ந்தெடுத்தவர்களின் கண்ணோட்டமும் உங்கள் முன் உள்ளது. இப்போது, அதை உங்கள் சொந்த மனதினால் கற்பனை செய்து பாருங்கள். திருமண வாழ்க்கை என்ற கருத்து இஸ்லாம் நமக்கு எவ்வளவு அழகாகக் கொடுத்துள்ளது என்பதைப் பாருங்கள். இதை விட சிறந்ததாக வேறு எதுவும் இருக்க முடியாது.

# பிறர் நலன் நாடல் பற்றிய கண்ணோட்டம்

இஸ்லாம் நமக்கு பிறர் மீது அன்பாக இருக்கக் கற்றுக்கொடுக்கிறது. நபி ﷺ அவர்கள், "மார்க்கம் என்பது முழுமையான கருணையே" என்று கூறினார்கள். இதன் பொருள், மார்க்கத்தைப் பின்பற்றும் ஒருவர் எப்போதும் பிற மனிதர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வார் என்பதாகும். அவர் அனைவரையும் கருணையுடனே நடத்துவார். இதுவே நமது மார்க்கத்தின் அடிப்படை போதனையாகும்.

இஸ்லாம் என்பது கருணைகாட்டுவதின் மற்றொரு பெயர் என்பது போல் இந்த ஹதீஸ் அமைந்துள்ளது. நமது சிறந்த முன்னோர்கள் மற்றவர்களிடம் எவ்வளவு அன்பாக இருந்துள்ளார்கள் என்பதற்கான சில உதாரணங்களைக் கேளுங்கள்.

# நுகர்வோரின் நலன்நாடல்

இமாம் அபூ ஹனிஃபா (ரஹ்) அவர்கள் ஒரு நாள் லுஹருக்குப் பிறகு விரைவாக தனது கடையை மூடிவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். ஒரு மனிதர் செல்லும் வழியில் அவர்களைச் சந்தித்தார். அவர், "நுஃமான் அவரகளே! அதற்குள் உங்கள் கடையை மூடிவிட்டு வீட்டிற்குச் செல்கிறீர்களே?" என்று கேட்டார். "ஆம், இன்று நான் என் கடையை விரைவாக மூடிவிட்டேன்" என்றார்கள். அவர், "ஏன் நீங்கள் விரைவாக மூடினீர்?" என்று கேட்டார். அதற்கு, "இன்று வானம் மேகமூட்டமாக இருப்பதால், போதுமான வெளிச்சம் இல்லை. அதனால் வாடிக்கையாளருக்கு துணிகளின் தரம் குறித்து சரியாக முடிவெடுக்க முடியாமல் போகலாம் என்று கூறினார்கள்.

யாரும் துணிகள் மலிவானவை என்று நினைத்து, என்னிடமிருந்து அவற்றை வாங்கி ஏமாந்து விடக்கூடாது என்பதற்காக நான் என் கடையை விரைவாக மூடிவிட்டேன் என்று கூறினார்கள். இவ்வாறாக ஒரு கடைக்காரர் தனது வாடிக்கையாளரின் நலனை விரும்பக்கூடியவராக இருந்துள்ளார்.

## வியாபாரியிடம் நலன் நாடல்

அவ்வாறே பொருளை வாங்குபவரும் வியாபாரிக்கு உதவி செய்பவராக இருந்தார். ஒரு தோழர் ஒரு குதிரையை வாங்கினார். அவர் அந்தக் குதிரையை ஆயிரம் திர்ஹம்களுக்கு வாங்கி, வீட்டிற்குக் கொண்டு வந்து கட்டி வைத்தார். மறுநாள், அவருடைய நண்பர் ஒருவர் அவரது வீட்டிற்கு வந்த போது தனது நண்பரிடம், "நான் இந்தக் குதிரையை ஆயிரம் திர்ஹங்களுக்கு வாங்கியுள்ளேன்" என்றார். நண்பர் அதைப் பார்த்து, "ஆம், இது மிகவும் நல்ல குதிரை. இது 1500 திர்ஹங்கள் மதிப்புடையதாகத் தெரிகிறது" என்றார்.

இது 1500 திர்ஹங்கள் மதிப்புடையதாக இருக்கும் என்று அவர் சொன்னதும், மறுநாள் அவர் மேலும் 500 திர்ஹம்களை எடுத்துக்கொண்டு அக்குதிரையை விற்ற வியாபாரியிடம் சென்று, "நீங்கள் இந்த 500 திர்ஹங்களை கூடுதலாக பெற்றுக் கொள்ளவும். இது உங்களுக்கானது. உங்கள் குதிரையின் சரியான மதிப்பு உங்களுக்குத் தெரியவில்லை. எனது நண்பர் அதைச் சோதித்துப் பார்த்து அது 1500 திர்ஹங்கள் மதிப்புடையது என்றார். எனவே, நான் உங்களுக்கு 500 திர்ஹங்களைக் கொடுக்க வந்துள்ளேன். நான்

உங்களை ஏமாற்றும் விதத்தில் நடந்து கொள்ளக் கூடாது என்று கூறினார்.

## அறிமுகமில்லாதவருக்கும் நலன் நாடல்

பக்தாத் முஸ்லிம்களின் தலைமைப் பீடமாக இருந்த நாட்களில், காஃபிர்கள் அங்கு ஒரு உளவாளியை அனுப்பி, "பக்தாத் எதனால் உலகின் மிகப்பெரிய சக்தியாகத் திகழ்கிறது. அவர்களுடைய சமூகத்தின் தனிச்சிறப்பு என்ன?. அவர்கள் எங்கு சென்றாலும், வெற்றி அவர்களின் பாதங்களை முத்தமிடுவதற்கான காரணம் என்ன? என்ற தகவல் சேகரிக்கக் கூறினார்கள். அதன்படி அவர் பக்தாத்திற்கு வந்தார். அவருக்கு கடுமையான பசி ஏற்பட்ட போது அங்கிருந்த ஒரு உணவகத்திற்குள் சாப்பிடுவதற்காக நுழைந்தார்.

அங்கு அவருக்கு அருகில் இன்னொருவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவர் அவ்வப்போது இந்த புதியவரைப் பார்த்துக் கொண்டே இருந்தார். தான் ஒரு புதியவன் என்பதால், அவர் தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று அவர் நினைத்துக் கொண்டார்.இறுதியாக சாப்பிட்டு முடித்ததும், அவர் கவுண்டருக்குச் சென்று காசாளரிடம், "நான் எவ்வளவு பணம் செலுத்த வேண்டும் என்று கேட்டார். அவர், "தோழரே உங்கள் பில் ஏற்கனவே செலுத்தப்பட்டு விட்டது என்று கூறினார்.அதை யார் செலுத்தினார்கள்?" என்று

கேட்ட போது "தோழரே உங்களுக்கு அருகில் சாப்பிட்டுக் கொண்டிருந்த நபர் தனது பில்லுக்கு பணம் செலுத்த வந்தபோது, "இந்த நபர் எனக்கு ஒரு பயணியைப் போலத் தெரிகிறார். இந்தப் பயணி இன்று என் விருந்தாளி. அதனால் நான் தான் அவருக்கு பணம் செலுத்துவேன்" என்று அவரே பணத்தை கொடுத்துவிட்டார். நீ அவருக்கு அவருடைய இச்செயலுக்காக நன்றி தெரிவிப்பதைக் கூட விரும்பாததால் தான் பணம் கொடுத்ததைக் கூட உனக்கு அவர் தெரிவிக்கவில்லை என்றார். அவர் அதன் முழு நன்மையை அல்லாஹ்விடம் பெறவே இவ்வாறு செய்தார். இந்த மக்கள் இவ்வளவு விருந்தோம்பல் செய்வதைக் கண்டு அவர் மிகவும் ஆச்சரியப்பட்டார்.

## கடைக்காரர்களுக்கு நலன் நாடல்

அவர் சற்று முன்னேறிச் சென்ற கொஞ்ச நேரத்தில் அவருக்கு ஏதோ ஒன்று வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே அவர் அங்கிருந்த ஒரு கடைக்குள் நுழைந்தார். கடைக்காரரிடம் எனக்கு இன்ன பொருளைத் தாருங்கள் என்று கேட்டார். அவர் இப்பொருள் இவ்வளவு திர்ஹங்களுக்குக் கிடைக்கும் என்றார். அவர் திர்ஹங்களை எடுத்து கொடுக்க ஆயத்தமானபோது அக்கடைக்காரர், இதே பொருள் எதிரே உள்ள கடையில் இதே விலையில் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். தயவுசெய்து தாங்கள் அங்கு சென்று வாங்கிக் கொள்ளலாமே என்றார்.

அவரும் அங்கு சென்று அதே பொருளை அதே பணத்திற்குப் பெற்றார். முதல் கடைக்காரர் ஏன் இதை தன்னிடம் வைத்துக் கொண்டே எனக்குக் கொடுக்கவில்லை என்று அவர் யோசித்தார். எந்த கடைக்காரரும் ஒரு வாடிக்கையாளரை வெறுங்கையுடன் செல்ல விடுவதில்லை. நான் அவரை எப்படியாவது சமாதானப்படுத்த வேண்டும், மேலும் எப்படியாவது என்னுடைய பொருளை வருபவருக்கு விற்று இலாபம் பார்க்க வேண்டும் என்றே எண்ணுவார். ஆனால் இவரோ என்னை

வேறொரு கடைக்கு அனுப்புகிறார் இதற்கு என்ன காரணம்? என்று யோசித்தவராக அவர் முதல் கடைக்காரரிடம் சென்று, "உங்களிடம் இது இல்லையா அல்லது நீங்கள் அதை எனக்குக் கொடுக்க விரும்பவில்லையா?" என்று கேட்டார்.

அவர், "என்னிடம் அது இருந்தது, ஆனால் என்னிடமிருந்து வாங்குவதற்குப் பதிலாக நீங்கள் அதை அவரிடம் வாங்க வேண்டும் என்று நான் விரும்பினேன்" என்று அவர் கூறினார். ஆனால் எந்த கடைக்காரரும் ஒருபோதும் அவ்வாறு செய்வதில்லையே!. நீங்கள் ஏன் அவ்வாறு செய்தீர்கள்? என்று கேட்ட போது அதற்கு உண்மையான காரணம் என்னவென்றால், இன்று பல வாடிக்கையாளர்கள் என்னிடம் வந்துவிட்டார்கள். அதனால் நான் போதுமான இலாபம் அடைந்துவிட்டேன். இன்றைய தினத்தில் என் மனைவி, குழந்தைகளுக்கான வாழ்வாதாரத் தேவை பூர்த்தியாகிவிட்டது. ஆனால் இன்று அந்த கடைக்கார சகோதரரிடம் எந்த வாடிக்கையாளர்களும் வந்ததாக நான் பார்க்கவில்லை.

எனவே "நீயாவது அந்த பொருளை அவரிடம் வாங்கினால், அவருக்கு இலாபம் கிடைக்கும். இந்த வழியில், அவரது மனைவி மற்றும் குழந்தைகளுக்கான உணவு ஏற்பாடாகிவிடும்" என்று கூறினார். இவ்வாறே கடைக்காரர்கள்

ஒருவருக்கொருவர் மிகவும் அன்பாக இருந்தனர். இவ்வகையான கருணை தான் இஸ்லாத்தின் போதனைகளில் கற்பிக்கப்படுகிறது.

## இறைமறுப்பாளர்கள் பிறர் மீது இரக்கம் காட்டும் பாணி

இந்த நன்மை பயக்கும் செயலை குஃப்ருடைய கொள்கையால் கற்பிக்க இயலாது. இறை மறுப்பாளர்கள் எவருக்காவது நல்லது செய்தால், அது அவர்களின் சொந்த நலனுக்காகவே இருக்கும். ஒரு ஏழைக்கு கை நிறைய பணம் கொடுப்பதைப் போன்று வெளிப்படை யாகத் தெரிந்தாலும் அவருக்கு வட்டிக்கே கடன் வழங்கப்படுகிறது. அவர்களின் பார்வையில் இது ஒரு உதவி என்பதாகவும் சொல்லிக் கொள்ளப்படுகிறது. சுப்ஹானல்லாஹ்! வட்டிக்கு கடன் கொடுத்து விட்டு உதவி செய்கிறோம் என்பதாக சொல்லுகிறார்கள். இது எவ்வளவு பெரிய அநியாயம்.

மேலும் இதையும் உள்நாட்டு நிறுவனங்கள் தான் செய்ய வேண்டும் என்று நிபந்தனை வேறு விதிக்கப்படுகிறது. ஏனெனில் இதனால் கிடைக்கும் இலாபம் தங்களுக்கே கிடைக்க வேண்டும் என்பதும் மறைமுகமான திட்டமாகும். இப்படித்தான் குஃப்ருடைய கொள்கை நன்மை பயக்கும் செயலைச் செய்யச் சொல்கிறது.

## இறைமறுப்பாளர்களின் நாய்கள் மற்றும் பூனைகளின் செலவுகள்

வெளிநாட்டில் உள்ள ஒரு அருங்காட்சியகத்தைப் பார்வையிட எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அதில் ஒரு விசித்திரமான கருத்து எழுதப்பட்டிருந்தது. உலக நாடுகளில் நிலவி வரும் வறுமையை ஒழிக்க ஒவ்வொரு ஆண்டும் பல பில்லியன் டாலர்கள் தேவைப்படுவதாகவும், ஐரோப்பிய நாடுகள் செல்லப்பிராணிகளுக்காக ஒவ்வொரு ஆண்டும் அதே அளவு டாலர்களை செலவிடுவதாகவும் அதில் எழுதப்பட்டிருந்தது. அங்குள்ள வீடுகளில் வளர்க்கப்படும் நாய்கள் மற்றும் பூனைகளுக்கு, மனிதர்களுடைய வறுமையை ஒழிக்கத் தேவைப்படும் பில்லியன் கணக்கான டாலர்கள் செலவிடப்படுகின்றன. இதனாலேயே மக்களிடம் நிலவும் வறுமையை முடிவுக்குக் கொண்டுவர முடியவில்லை.

ஏனெனில் இந்த நல்லெண்ணம் அல்லாஹ்வுக்காக அல்ல. மாறாக அது அவர்களின் சொந்த இலக்குகளை அடைவதற்காகவே. அவர்கள், "நாங்கள் உங்களை விடப் பெரியவர்கள், நீங்கள் எங்களுக்கு இளையவர்கள். எனவே

எங்களுக்கே மிக நல்ல வாழ்க்கை கிடைக்கும்" என்று சொல்வது போல் தெரிகிறது.

இப்போது இஸ்லாமிய மார்க்கம் நமக்கு எவ்வளவு நல்லெண்ணத்தைக் கற்றுக் கொடுத்திருக்கிறது என்பதைப் பற்றி யோசித்துப் பாருங்கள். அது ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தவும், கருணை காட்டவும் கற்றுக் கொடுத்துள்ளது. இதுதான் இஸ்லாமியமார்க்கத்தின் கண்ணோட்டமாகும். மறுபுறம் குஃப்ருடைய கொள்கையை அடியொற்றிய வாழ்க்கை முறை. இப்போது நீங்களே, சற்று சாந்தமான இதயத்துடனும், மனதுடனும், இந்த இரண்டு வாழ்க்கை முறைகளில் எது சிறந்தது என்று சிந்தியுங்கள். மனிதநேயம் எங்கே? அன்பு எங்கே? இரக்கம் எங்கே? நல்லெண்ணம் எங்கே உள்ளது என்பதை சிந்தியுங்கள். இவை அனைத்தும் கொடுக்கல் வாங்கல் பற்றிய விஷயங்களாகும்.

## இஸ்லாத்தில் அடக்கம் மற்றும் கற்பு பற்றிய கருத்தோட்டம்

இஸ்லாம் நமக்கு கற்பொழுக்கமுள்ள வாழ்க்கை முறையைக் கற்றுக்கொடுக்கிறது. அதனால்தான் இஸ்லாம் பர்தாவை கட்டளையிட்டுள்ளது. ஒவ்வொருவரும் தங்கள் இல்லற வாழ்வை நிம்மதியாக வாழவும், வேறு யாருடைய கௌரவத்திற்கும் களங்கம் ஏற்படுத்தக் கூடாது என்பதற்காகவும், மஹ்ரம் மற்றும் மஹ்ரம் அல்லாதவர் என்ற கருத்தாக்கத்தை அது வழங்கியுள்ளது.

"வெட்கம் என்பது இஸ்லாத்தின் ஒரு முக்கிய அம்சம்" என்று கூறியுள்ளது.

உங்கள் மனதில் எந்த கெட்ட எண்ணங்களும் எழக்கூடாது என்பதற்காக, மற்றவர்களின் மறைவானதைக் கூடப் பார்க்கக் கூடாது என்று இஸ்லாம் கூறுகிறது. இதுதான் இஸ்லாத்தின் போதனை.

# வெட்கம் பற்றி இறைமறுப்பாளர்களின் போதனை

வெட்கம் என்பது ஒரு நோய் என்பதாக இறை மறுப்பாளர்கள் போதிக்கிறார்கள். அங்குள்ள பள்ளி மாணவர்கள் ஒரு பெண் ஆசிரியையின் முன் தங்கள் பார்வைகளைத் தாழ்த்தினால், கூச்சம் என்பது ஒரு நோய், ஆசிரியரைப் பார்க்காமல் குனிந்து பேசுவது கண்ணியக் குறைவு என்று அவர்களிடம் கூறப்படுகிறது. கண்ணுக்குக் கண் பார்த்துப் பேசுங்கள் என்று குழந்தைகளுக்குக் கற்பிக்கிறார்கள்.

அவ்வாறே அவர்களிடம் உடை அணிவதில் எந்தக் கட்டுப்பாடும் இல்லை. இன்று, இறைமறுப்பாளர்களே இது விஷயத்தில் சோர்ந்து விட்டார்கள். நீங்கள் அவர்களின் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று பார்த்தால், அவர்களின் மாணவிகள் அணியும் ஆடைகளைப் பார்த்து நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். அவர்கள் இந்த உடையோடு தூய சிந்தனையில் எவ்வாறு வாழ முடியும்? என்பதாக யோசிப்பீர்கள்.

## ரோஷமற்ற மட்டரகமான பார்ட்டிகள்

அங்கே அவ்வப்போது பார்ட்டிகள் நடை பெறும். அதில் குழு நடனமும் இருக்கும். அவர்கள் ஒருவருக்கொருவர் கண்ணெதிரே பாலியல் உறவு கொள்வார்கள். அங்குள்ள வாழ்க்கை முறையில் ஒரு பெண் கணவனல்லாத பிறருக்கு விருந்தாகவும், கணவனல்லாத பிறரை மனதில் கொண்டவளாகவுமே இருப்பாள்.

கணவனும் மனைவியும் குஃப்ருடைய கொள்கையுடன் எவ்வாறு ஒன்றாக வாழ்கிறார்கள் தெரியுமா? அவர்கள் உணவுச் செலவுகளுக்குக் கூட தனித்தனியாக சம்பாதித்து ஒன்றாக செலவிடுகிறார்கள். மாலையில், இருவரும் ஒரு இரவு விடுதிக்கு ஒன்றாக புறப்படுவார்கள். அங்கு, கணவர் வேறு ஒரு பெண்ணுடன் நேரத்தைச் செலவிடுவார். மனைவி வேறு ஒரு ஆணுடன் பாலியல் ரீதியாக முறைகேடாக இன்பம் பெறுவாள். எல்லாம் முடித்த பிறகு, அங்கிருந்து கணவன் மனைவி மீண்டும் ஒன்றாகவே இருவரும் வீடு திரும்புவார்கள்.

இப்போது நீங்களே யோசித்துப் பாருங்கள். இஸ்லாம் திருமண வாழ்க்கை சம்பந்தமான

வேறுவிதமான கண்ணோட்டத்தை வழங்கியுள்ளது. அது வெட்கம் மற்றும் கற்பு என்ற சரியான இலக்கை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மறுபுறம், இறைமறுப்புக் கொள்கை திருமண வாழ்க்கைத் தொடர்பான வேறோரு கருத்தை தந்துள்ளது. கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் நூற்றுக் கணக்கான ஆண்களும் பெண்களும் குதிரைகள், கழுதைகள் போல ஒரே இடத்தில் பிறர் பார்க்க பாலியல் உறவு கொள்ளுவது மனிதத்தன்மைக்கு அப்பாற்பட்ட செயல் என்பதை நிச்சயம் உணர்வீர்கள். உண்மையில் அவர்களுக்கும், விலங்குகளுக்கும் மத்தியில் எந்த வித்தியாசமும் இல்லை.

# உண்மை பற்றிய கண்ணோட்டம் இஸ்லாமிய போதனைகள்

இஸ்லாம் நமக்கு சத்திய வாழ்க்கை வாழக் கற்றுக்கொடுக்கிறது. நபி ﷺ அவர்கள், "நான் உன்னதமான ஒழுக்கங்களைக் கற்பிக்க அனுப்பப்பட்டேன்" என்று கூறினார்கள். இந்த உன்னதமான ஒழுக்கங்களில் நபி ﷺ அவர்கள் முதன்மையாகச் சொன்னது, "உண்மையைச் சொல்லுங்கள், நம்பகத்தன்மையோடு நடந்து கொள்ளுங்கள்" என்பதாகும்.

நாம் உண்மையைப் பேசவில்லை என்றால், அது நமது தவறுதான். ஆனால் முஃமின்கள் உண்மையையே பேச வேண்டும் என்பது நமது மார்க்கத்தின் போதனையாகும். நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: ஒரு விசுவாசி எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம், ஆனால் அவன் பொய்யனாக இருக்க முடியாது.

# இஸ்லாத்தின் வெற்றி

இந்தியாவில் காந்தலா என்ற பெயர் கொண்ட ஒரு சிறிய கிராமம் இருக்கிறது. அங்கே ஒரு நிலம் சம்பந்தமாக ஒரு இந்துவுக்கும், முஸ்லிமுக்கும் மத்தியில் பிரச்சினை ஏற்பட்டுவிட்டது. அந்த முஸ்லிம் அதைத் தன்னுடைய நிலம் என்பதாகவும், அந்த இந்து அது தன்னுடையது என்றும் கூறினர். அது அவர்கள் இருவருக்கும் இடையிலான தனிப்பட்ட விஷயம். ஆனால் அந்த முஸ்லிமான நபர் கொஞ்சம் புத்திசாலித்தனத்தைக் காட்டி, இந்த நிலம் எனக்குக் கிடைத்தால், நான் இங்கே ஒரு மசூதியைக் கட்டுவேன் என்று கூறினார். அவர் மசூதி கட்டுவதைப் பற்றிப் பேசியபோது, அங்கிருந்த அனைத்து முஸ்லிம்களும் அந்த நிலம் முஸ்லிமுக்கே கிடைக்க வேண்டும் என்று அவருடன் உடன்பட்டனர்.

மறுபுறம், அனைத்து இந்துக்களும் ஒன்று கூடிவிட்டனர். எனவே இது மிகவும் உணர்திறன் வாய்ந்த பிரச்சினையாக மாறிவிட்டது. இறுதியாக இந்த வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்றது. விசாரணைக்கான நேரம் வந்தபோது, இரு தரப்பிலிருந்தும் நூற்றுக்கணக்கான மக்கள் வந்திருந்தனர். நீதிபதி ஒரு விவேகமுள்ள மனிதராக

இருந்தார். அவர் ஒரு காஃபிராக இருந்தாலும், இது மிகவும் உணர்திறன் வாய்ந்த பிரச்சினை என்று அவர் நினைத்தார். இதில் சற்று கூடுதல் குறைவு ஏற்பட்டு விட்டால், இந்த கிராமத்தில் கலவரம் மூண்டு மனிதர்களின் உடல்கள் சிதறிக் கிடக்கும் நிலை உருவாகலாம்.

எனவே, இப் பிரச்சினையை சுமூகப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்ப்பதே நல்லது என்று உணர்ந்தார். இரு தரப்பினரும் கலந்து பேசி பிரச்சினையைத் தீர்க்க ஏதேனும் வழி இருக்கிறதா என்று சொல்லுங்கள் என்று கேட்டார். இந்துக்கள் ஆம், ஒரு வழி இருக்கிறது. அதாவது, ஒரு முஸ்லிம் அறிஞரின் பெயரைக் கூறி, அவரை அழைத்து அவரது சாட்சியத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் அது ஒரு முஸ்லிமுடையது என்று சொன்னால், அதை அவரிடம் கொடுத்து விடுங்கள். அல்லது அது ஒரு இந்துவுக்குச் சொந்தமானது என்று சொன்னால், அதை அந்த இந்துவிடம் கொடுங்கள் என்றனர்.

நீங்கள் மிகச் சரியாகச் சொன்னீர்கள். இம் மாதிரியான பிரச்சினைகளைப் பேச்சு வார்த்தையின் மூலமே தீர்க்க முடியும் என்று நீதிபதி கூறினார். அதன் பிறகு, நீதிபதி அடுத்த தேதியை நிர்ணயித்தார். எவ்வாறிருப்பினும், அவர் ஒரு முஸ்லிமாக இருப்பதால், அவர் அல்லாஹ்வின் வீட்டைக் கட்டுவதைப் பற்றி மட்டுமே பேசுவார்.

அல்லாஹ்வின் வீட்டைக் கட்டுவதற்கு அதை ஒரு முஸ்லிமுக்குக் கொடுங்கள் என்று சொல்வார். மேலும் அது கிடைத்தால், நாங்கள் ஒரு கோவிலைக் கட்டுவோம் என்று இந்துக்கள் கூறியதால், கோவில் கட்டுவதற்கு எவ்வாறாகிலும் அவர் விரும்பமாட்டார் என்பதை எண்ணி முஸ்லிம்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.

இதற்கு மாற்றமாக, இந்து பொதுமக்கள் மிகவும் ஏமாற்றமடைந்தனர். நீங்கள் நீதிபதியிடம் எந்த நல்ல ஆலோசனையையும் வழங்கவில்லை என்று பொதுமக்கள் தங்கள் பிரதிநிதிகளிடம் அதிர்ப்தியை வெளிப்படுத்தினர். நீங்கள் ஒரு முஸ்லிமின் பெயரைக் குறிப்பிட்டுள்ளீர்கள். முஸ்லிமாக இருப்பவர் என்ன தீர்வைக் கூறுவார் என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் சமரசம் பேசப் போகிறவர்கள் தாங்கள் எடுத்த முடிவு சரி என்று திருப்தி அடைந்தனர். இப்போது அந்த நாள் வந்துவிட்டது.

# அந்த நாளுக்காவே நாட்கள் எண்ணப்பட்டன

நீதிமன்றத்தில் ஒரு பெரிய கூட்டம் இருந்தது. அந்த நேரத்தில், ஆங்கில நீதிபதி இந்துக்களிடம் அந்த முஸ்லிம் அறிஞர் யார் என்று கேட்டார். அவர்கள் முஃப்தி இலாஹி பக்ஷ் காந்தலவி என்று கூறினர். பிறகு அவர் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டார். நீதிபதி முஃப்தி சாஹிப்பிடம், "முஃப்தி சாஹிப், அந்த நிலம் ஒரு முஸ்லிமுக்குச் சொந்தமானதா அல்லது இந்துவுக்குச் சொந்தமானதா என்று சொல்லுங்கள்" என்று கேட்டார்.

அப்போது முஃப்தி சாஹிப் உடனடியாக அது அந்த முஸ்லிமுக்குரியது என்று பதிலளிப்பார் என்று முஸ்லிம்கள் மிகவும் திருப்தி அடைந்து எதிர்பார்த்திருந்தனர். ஆனால் முஃப்தி சாஹிப் பிரிட்டிஷ் நீதிமன்றத்தில், "சார், நீங்கள் என்னிடமிருந்து சாட்சியமளிக்க விரும்பினால், இந்த நிலம் ஒரு இந்துவுக்குச் சொந்தமானது, அது அவருடைய சொத்து என்று நான் சாட்சியமளிக்கிறேன்" என்று கூறினார். பின்னர் நீதிபதி ஒரு இந்து அதில் கோயில் கட்ட விரும்பினாலும் நீங்கள் இதே

சாட்சியம் அளிப்பீர்களா என்று கேட்டார். சொத்து அவருடையது என்பதால், அதில் தனது வீட்டையோ அல்லது கோயிலையோ கட்டுவது அவருக்குச் சொந்தமான உரிமை என்று கூறினார். அவர் இந்த தீர்வைக் கூறியபோது, முஃப்தி சாஹிப்! என்ன இப்படியொரு தீர்வைக் கூறியுள்ளார் என்று முஸ்லிம்கள் வாயடைத்துப் போனார்கள்.

ஆனால் பிரிட்டிஷ் நீதிபதி ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவை வழங்கினார். இன்று, இந்த வழக்கில் முஸ்லிம்கள் தோற்றுவிட்டனர், ஆனால் இஸ்லாம் வெற்றி பெற்றுள்ளது. அவர் தனது தீர்ப்பைக் கூறிய போது, இந்துக்கள், "நீதிபதியே, நீங்கள் உங்கள் தீர்ப்பைக் கூறிவிட்டீர்கள். எங்கள் முடிவையும் கேளுங்கள்" என்றனர். அந்த முடிவு என்னவென்றால், உண்மையான, சத்திய இஸ்லாத்தின் மகத்துவத்தால் ஈர்க்கப்பட்டு, கலிமாவை கூறுவதன் மூலம் நாங்களும் முஸ்லிம்களாக மாறுகிறோம் என்றனர். இப்போது இதே இடத்தில் எங்கள் சொந்தக் கைகளால் நாங்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு மசூதியைக் கட்டப்போகிறோம் என்றனர்.

"ஆயிரம் பயங்கள் இருக்கலாம்,
ஆனால் நாவு தான் இதயத்தின் நண்பன்"

இதுவே பழங்காலத்திலிருந்தே மகான்களின் வழிமுறையாக இருந்து வருகிறது.

## விட்டுக் கொடுத்தல் பற்றிய கண்ணோட்டம்

இன்னொரு விஷயத்தைக் கவனியுங்கள்; நாம் ஒன்றாக வாழும்போது, மற்றவர்களுக்காக நாம் பெரும்பாலும் பல விஷயங்களை விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும். இதற்கு இஸ்லாமிய மார்க்கத்தில் முன்னுரிமை அளித்தல் என்று அழைக்கப்படுகிறது. இறை நிராகரிப்புக் கொள்கை கொண்டவர்களிடம் முன்னுரிமை அளித்தல் என்ற ஒன்றே இல்லாததால் அதற்கென்று ஆங்கிலத்தில் எந்த வார்த்தையும் இல்லை.

அவர்களிடம் சுயநலமின்மை என்ற ஒன்று இருந்திருந்தால், அதற்கு அவர்கள் ஒரு வார்த்தையை உருவாக்கி இருப்பார்கள். இந்தப் பண்பு இல்லாதபோது, அந்த வார்த்தையை எங்கிருந்து கொண்டு வருவார்கள்? இதற்கு இணையான எந்த வார்த்தையையும் என்னாலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இஸ்லாத்தில் இந்த வகையான குணாதிசயம் ஏற்கனவே கற்பிக்கப்பட்டுள்ளதால், இதற்காக தனி வார்த்தை பயன்பாட்டில் இருக்கிறது. ஈசார் என்றால் உங்கள் சொந்தத் தேவைகளைப் பிற்படுத்தி உங்கள் சகோதரரின் தேவைகளை

முற்படுத்துவதற்குக் கூறப்படும். இதைக் கற்றுக் கொடுத்தது யார்? இஸ்லாம் இதைக் கற்றுக் கொடுத்துள்ளது. எனவே, இது புனித குர்ஆனின் போதனையாகும்.

وَالَّذِينَ تَبَوَّءُو الدَّارَ وَالْإِيمَنَ مِن قَبْلِهِمْ يُحِبُّونَ مَنْ هَاجَرَ إِلَيْهِمْ وَلَا يَجِدُونَ فِى صُدُورِهِمْ حَاجَةً مِّمَّآ أُوتُوا وَيُؤْثِرُونَ عَلَىٰٓ أَنفُسِهِمْ وَلَوْ كَانَ بِهِمْ خَصَاصَةٌ وَمَن يُوقَ شُحَّ نَفْسِهِ فَأُولَـٰٓئِكَ هُمُ الْمُفْلِحُونَ

அவர்களுக்கே கடுமையான தேவை இருக்கும் போது, தங்கள் சகோதரர்களுக்கு முன்னுரிமை அளிப்பார்கள் என்று அல்லாஹ் சிலரைப் புகழ்ந்து கூறியுள்ளான். (சூரா அல்–ஹஷ்ர் 59:9)

# மூன்று தோழர்களின் முன்மாதிரியான தியாகம்

யர்முக் போரில் ஒரு பிரபலமான சம்பவம் நடந்தது. ஒரு நபித் தோழர் தனது காயங்களால் மிகவும் பலவீனமாக இருந்தார். தாகத்தின் தீவிரத்தால் அவர் தனக்கு தண்ணீர் வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார். அவருடைய சிறிய தந்தை மகன் அவருக்கு தண்ணீர் கொடுக்க ஒரு தோல்துருத்தியுடன் அவருக்கு அருகில் வந்தார். அவர் அவருக்கு தண்ணீர் கொடுக்கத் தொடங்கியபோது, மறுபக்கத்திலிருந்து "ஆஹ், எனக்கு தாகமாக இருக்கிறது" என்று மற்றொரு குரல் வந்தது. அவர் தனது வாயை மூடிக்கொண்டு இந்த சகோதரனுக்கு முதலில் தண்ணீர் கொடு என்று சைகை செய்தார்.

மறுபக்கத்திலிருந்து தண்ணீர் கொடுக்கச் சென்றபோது, மூன்றாவது பக்கத்திலிருந்து "ஆஹ், எனக்கு தாகமாக இருக்கிறது" என்று மற்றொரு சப்தம் வந்தது. உடனே இரண்டாவது நபரும் தனது வாயை மூடிக்கொண்டு மூன்றாவது நபருக்கு அருகில் செல்ல சைகை செய்தார். மூன்றாவது நபருக்கு அருகில் சென்றதும், அவர் இறந்திருந்தார்.

பின்னர் அவர் விரைவாக இரண்டாவது நபருக்கு அருகில் வந்தார். அவரும் இறந்திருந்தார். அதன் பிறகு, அவர் தனது சகோதரரான முதல் நபருக்கு அருகில் வந்தார். அவரும் மரணமடைந்திருந்தார்.

ஒரு நபர் இறக்கும் தருணத்தில் பொதுவாக தாகம் மிகக் கடினமாக இருக்கும். அந்நேரத்தில் கூட, தன்னை விட பிறருக்கு முன்னுரிமை அளித்ததற்கான இதை விட சிறந்த ஒரு முன்னுதாரணத்தை மனிதகுல வரலாற்றில் காண இயலாது. இதை யார் கற்றுக் கொடுத்தது? இஸ்லாமிய மார்க்கம் தானே.

## அல்–ஹசன் நூரியின் முன்னுரிமைக்கான உதாரணம்

அபு அல்–ஹசன் நூரி (ரஹ்) ஒரு சிறந்த மனிதர். அவர் ஒரு முறை அக்கால ஆட்சியாளர் விரும்பாத ஒரு ஃபத்வாவை கொடுத்து விட்டார்கள். அந்த ஆட்சியாளன் அவர்களையும், அவர்களது தோழர்கள் சிலரையும் பிடித்து கொலை செய்ய உத்தரவிட்டான். அவர்கள் கொல்லப்படுவதை தான் நேரில் காண்பதற்கும் திட்டமிட்டான்.

அந்த மன்னன் அபுல்–ஹசன் நூரி கொல்லப்படுபவர்களின் வரிசையில் முன்னால் நிற்பதையும், அவரது சீடர்களில் மற்றவர்கள் அவர்களுக்குப் பின்னால் நிற்பதையும் கண்டான்.

அபுல்–ஹசன் நூரி மீது அவனது மனதில் கொஞ்சம் மரியாதை இருந்தது. ஆனால் அவரைத் தவிர மீதமுள்ளவர்களை நான் கொல்ல வேண்டும் என்றும் அவன் விரும்பினான். எப்படியாவது நான் அபுல்–ஹசன் நூரியை மட்டும் விடுவிக்க வேண்டும் என்று எண்ணினான்.

ஆனால் அபுல்–ஹசன் நூரி முதலில் எல்லோருக்கும் முன்பாக நின்றார். எனவே அவன் "இந்த இடம் சரியில்லை. அவர்களை வேறு இடத்திற்கு அழைத்து வாருங்கள்" என்றான். இதன் மூலம் அவர்கள் நிற்கக்கூடிய வரிசை மாறும் என்பதே அவனது நோக்கமாக இருந்தது. ஆனால் அங்கும், அபுல்–ஹசன் நூரி முதலாவதாக வந்து நின்று கொண்டார். பின்னர் அவன் "இல்லை, இந்த இடமும் சரியில்லை. அவர்களை இங்கே கொண்டு வாருங்கள்" என்றான். பிறகும் அபுல்–ஹசன் நூரியே முதலாவதாக வந்து நிற்பதைக் கண்டார்.

இறுதியாக, அவன் அபுல்–ஹசன் நூரியை அழைத்து, "அபுல்–ஹசன், நான் வேறொருவரைக் கொன்று அதை ஒரு சாக்காகப் பயன்படுத்தி உங்களை விடுவிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் மூன்று இடங்களிலும் நீங்கள் ஏன் முதலில் வந்து நின்றீர்கள்? நீங்கள் வேண்டுமென்றே வந்து நின்றீர்களா அல்லது தற்செயலாகவா?" என்று கேட்டான். அதற்கு நூரி அவர்கள், "ஆம் நான் வேண்டுமென்றே தான்

முன்னால் வந்து நின்றேன்" என்றார்கள்.

அதற்கு ஏன் அவ்வாறு வந்து நின்றீர் என்று கேட்க நான் வேண்டுமென்றே முன்னால் வந்து நின்றதற்குக் காரணம் மரணதண்டனை நிறைவேற்றுபவர் என்னைக் கொல்ல எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்வாரோ, அவ்வளவு நேரம் என் சகோதரர்களை உயிருடன் வைத்திருக்க எனக்கு வாய்ப்பு கிடைக்கும் என்று கூறினார்கள்.

இஸ்லாம் வழிகாட்டிய முன்னுரிமைக்கான போதனையை வேறு யாராலும் காட்ட முடியாது. இந்த கட்டத்தில், நீங்கள் இரண்டு வாழ்க்கை முறைகளையும் எடை போட வேண்டும். ஒன்று முழுக்க முன்னுரிமையே முன்னுரிமையே என்ற முழங்கும் வாழ்க்கை முறை. மற்றொன்று முன்னுரிமையைக் குறிக்க வார்த்தைகளே இல்லாத குஃப்ருடைய வாழ்க்கை முறை.

# இறைநம்பிக்கை அற்ற சமூகத்திற்கான ஒரு உதாரணம்

எங்களுக்குத் தெரிந்த ஒரு நபர் இங்கிலாந்தில் வாழ்ந்து கொண்டிருந்தார். அவருடைய மாமாக்கள் அவரைச் சந்திப்பதற்காக லண்டன் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தனர். அவர்களுக்குச் சொந்தமான ஒரு மாம்பழத் தோட்டம் இங்கு இருந்தது. அவர்கள் புறப்படத் தயாரான போது அவனது தாயார் என் மகனுக்கு உங்கள் தோட்டத்தின் பழங்களிலிருந்து ஒரு கூடை பழங்களைக் கொண்டு போய் கொடுங்கள் என்று வேண்டிக் கொண்டார். பொதுவாக தாய்மார்கள் தனது பிள்ளைகளுக்கு தங்களது கைகளால் சாப்பிட ஏதாவது கொடுக்காத வரை அவர்கள் திருப்தி அடைய மாட்டார்கள்.

எனவே அவரது மாமாக்கள் ஒரு பழக் கூடையை எடுத்துக் கொண்டு புறப்பட்டனர். "உன் தாய் உனக்காக இந்த அன்பளிப்பை அனுப்பியுள்ளார்" என்றனர். அவர் அதிலிருந்து கொஞ்ச மாம்பழங்களை தான் சாப்பிட்டுவிட்டு, தனக்கு அக்கம் பக்கமுள்ள அண்டை வீட்டார்களுக்கும் சிலவற்றைக் கொடுத்தார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. அவர் கதவருகே சென்று பார்த்தபோது, இருபுறமுமுள்ள அண்டை வீட்டார்கள் ஒன்று கூடி வந்திருப்பதைக் கண்டார். "நீங்கள் ஏன் வந்துள்ளீர்கள்?" என்று கேட்டார்.

அவர்கள்,"திரு.அகமது,நீங்கள் அனுப்பியமாம் பழங்கள் மிகவும் சுவையாக இருந்தன. நாங்கள் அவற்றை மிகவும் ரசித்தோம், ஆனால் அவற்றின் விலை எவ்வளவு என்று நீங்கள் எங்களிடம் சொல்லவில்லை. இப்போது எங்களுக்கு பில்லைக் கொடுங்கள். அப்போது தான் அதற்கான பணத்தை நாங்கள் உங்களுக்கு செலுத்த முடியும் என்றனர். இந்த சமூக மக்கள் அல்லாஹ்வுக்காக ஒருவர் மற்றவருக்கு அன்பளிப்பு கொடுக்க வழியுண்டு என்பதை அறவே அறியாமலுள்ளனர். உண்மையான காரணம் என்னவென்றால், அவர்களிடம் யாராவது அன்பளிப்புகளை வழங்கினால்,அதன்பின்னால்ஏதோமறைக்கப்பட்ட நோக்கம் இருக்கும். எந்த நோக்கமும் இல்லாமல் ஒருவருக்கொருவர் அன்பளிப்புக்களை வழங்கிக் கொள்வதை அவர்கள் அறியமாட்டார்கள்.

## இஸ்லாமிய சமூகத்தின் ஒரு எடுத்துக்காட்டு

ஆனால் இஸ்லாமிய சமூகத்தின் இந்த தன்னலமற்ற செயலின் மற்றொரு சம்பவத்தை நான் உங்களுக்குச் சொல்கிறேன். இது சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவம். ஒரு மனிதர் காபூலுக்குச் சென்று அங்கிருந்து திரும்பும்போது, மாதுளை மற்றும் பிற பழங்களால் ஆன ஒரு கூடையை வாங்கி வந்தார். அவர் பாகிஸ்தானை அடைந்ததும், அந்தக் கூடைகளை தனது தாயிடம் கொடுத்து, அங்கிருந்து உனக்காக ஒரு அன்பளிப்பு கொண்டு வந்துள்ளேன் என்று கூறினார். அவரது உறவினர்கள் சிலர் டெல்லியிலிருந்து அவரைச் சந்திக்க வந்திருந்தனர்.

அதே நாளில் அவர்கள் தாயகம் திரும்பிக் கொண்டிருந்தனர். அந்த தாய் தனது மகனிடம், மகனே, உறவினர்கள், பெண்களெல்லாம் திரும்பிச் செல்கிறார்கள். ஏன் அவர்களுக்கு இந்தக் கூடை பழங்களைக் கொடுக்கக்கூடாது? என்று கேட்டார். அதற்கு அந்த மகன் ஆம் அவ்வாறே செய்வோம் என்று கூறியவராக அந்த பழக் கூடையை அவர்களுக்குக் கொடுத்தார். அந்த நபர்கள் அந்த பழக் கூடையைக் கொண்டு வந்து டெல்லியிலுள்ள

தங்கள் தாயிடம் கொடுத்தபோது, அந்த நேரத்தில், ஒரு விதவையாக இருந்த வீட்டு வேலைக்காரி, தனது வீட்டின் பிரச்சினைகளைப் பற்றி அந்தத் தாயிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

என் குழந்தைகள் அனாதைகள் என்றும், எனக்கு கணவர் இல்லை என்றும் அவள் கூறிக்கொண்டிருந்தாள். அவர் மிகுந்த துயரத்தில் இருந்தாள். அந்தப் பெண்ணின் கவலைகளைக் கேட்டதும், அந்தத் தாய் அவர்கள் கொண்டு வந்த கூடையை எடுத்து அந்த வேலைக்காரியிடம் கொடுத்துவிட்டாள். இவ்விதமாக அவளுடைய எல்லா குழந்தைகளும் இந்தப் பழங்களைச் சாப்பிட்டார்கள்.

அந்த பழங்கள் காபூலிலிருந்து லாகூருக்கு கொண்டுவரப்பட்டன. பிறகு லாகூரிலிருந்து டெல்லிக்குச் கொண்டுசெல்லப்பட்டன. பிறகு டெல்லியிலிருந்த ஒரு விதவையிடம் சென்றடைகின்றன. பிறகு சில அனாதைகள் அதைச் சாப்பிடுகிறார்கள். இவ்வாறாக இஸ்லாம் நமக்கு தன்னலமற்ற சேவை மனப்பான்மையைக் கற்பிக்கிறது.

இப்போது,திறந்த மனதாலும்,பரந்த அறிவாலும் சிந்தித்து, இந்த இரண்டு வாழ்க்கை முறைகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள். எந்த வாழ்க்கை முறை மனிதகுலத்தின் உண்மையான பிம்பத்தைப் பிரதிபலிக்கிறது என்பதைப் பாருங்கள். நிச்சயமாக,

அந்த பிம்பம் இஸ்லாமிய போதனைகளிலே தான் பிரதிபலிக்கிறது என்பதை உணர்வீர்கள்.

## தாபியீன்களின் காலத்தில் ஒரு அற்புதமான எடுத்துக்காட்டு

தாபியீன்களின் காலத்தில் ஒரு சுவாரஸ்யமான சமபவம் நடந்துள்ளது. ஒருவர் நிலத்தை வாங்கினார். மற்றொருவர் அதை விற்றார். நிலத்தை வாங்கியவர் ஒரு நாள் ஏர் உழுது கொண்டிருந்தார். நிலத்தை ஆழமாக உழுதபோது, நிலத்தடியில் பெட்டி ஒன்று தென்பட்டது. அதில் தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள் நிரம்பியிருந்தன. முற்கால மக்கள் தங்கத்தையும், வெள்ளியையும் பாதுகாக்க தரையில் புதைத்து வைப்பார்கள். இவ்விடத்தில் புதையல் வெளிப்பட்ட போது, அவர் மிகவும் ஆச்சரியப்பட்டார். நான் எனக்கு நிலத்தை விற்ற வியாபாரியிடம் நிலத்தை மட்டுமே வாங்கினேன் புதையலை அல்ல என்று அவர் நினைத்தார்.

எனவே மறுநாள் அவர் நிலத்தை விற்றவரிடம் சென்று, "இந்தப் புதையல் நீங்கள் விற்ற நிலத்திலிருந்து வெளிப்பட்டுள்ளது. இது உங்களுடையது, நீங்கள் அதை என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்" என்றார்.அவர் அதை அவருக்குக் கொடுக்கத் தொடங்கியபோது, அந்த மனிதன், "இல்லை சகோதரரே. நான் நிலத்தை

விற்ற பின் அதிலிருந்து வரும் லாபம் அனைத்தும் உங்களுடையதாகவே இருக்கும். என்னுடையது அல்ல. எனவே, இது என்னுடையது அல்ல, உங்களுடையது தான் என்றார்.

இப்போது அவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. எனவே, இருவரும் ஒரு முடிவைப் பெற நீதிபதியிடம் சென்றனர். உண்மையான அர்த்தத்தில் நாம் முஸ்லிம்களாக இருந்தபோது, நம் வழக்குகள் நீதிமன்றங்களுக்கு வரும். ஒருவர், "அது என் உரிமை இல்லை, அது என் சகோதரனின் உரிமை" என்று கூறுவார். மற்றவர், "அது என்னுடையது இல்லை, அது என் சகோதரனின் உரிமை" என்று கூறுவார். நீதிபதியே, நீங்களே முடிவு செய்யுங்கள் என்று கூறுவர்.

ஆனால் இன்று, நம்முடைய பிரச்சினைகள் வேறு விதமாக உள்ளது. ஒருவர், "என் உரிமைக்காக கடைசி சொட்டு இரத்தத்தைக் கூட சிந்துவேன்" என்று கூறுகிறார், மற்றவர், "நான் என் உரிமைக்காக அதைச் செய்வேன், இதைச் செய்வேன் என்று சபதமிடுகிறார்." அதனால் தான் இன்றைய நீதிமன்றங்களுக்கு நாம் சென்றால் சண்டை, சச்சரவு சார்ந்த வழக்குகளே நிரம்பி இருப்பதைக் காணலாம்.

நீதிமன்றத்தில் மேலே கூறப்பட்ட வழக்கு முன்வைக்கப்பட்டது. இதில் எவ்வாறு தீர்ப்பளிப்பது என்று நீதிபதியும் சற்று குழப்பத்தில் இருந்தார்.

அந்த நீதிபதி ஒரு பக்தியுள்ள மனிதராக இருந்தார். அல்லாஹ் அவர்களின் இதயங்களை அறிவின் ஒளியால் நிரப்பியிருந்தான். அவர் இருவரிடமும் அவர்களின் வாழ்க்கைச் சூழ்நிலைகள் குறித்துக் கேட்டார். இதன் மூலம், அவர்களில் ஒருவரின் வீட்டில் ஒரு இளம் மகன் இருப்பதையும், மற்றொருவரின் வீட்டில் ஒரு இளம் மகள் இருப்பதையும் அவர் அறிந்துகொண்டார்.

எனவே அவர், "நீங்கள் என்னிடம் ஒரு தீர்ப்பைக் கேட்டால், இந்த மகனும் இந்த மகளும் ஒருவருக்கொருவர் திருமணம் செய்து கொள்வது நல்லது என்றும், இந்த புதையல் அவர்கள் இருவருக்கும் மணக்கொடைகளாக கொடுக்கப்பட வேண்டும் என்றும் நான் தீர்ப்பு வழங்குவேன்" என்றார். ஒரு வாழ்க்கை முறை நமக்கு நலன் நாடுவதைக் கற்பிக்கிறது, மற்றொரு வழிமுறை மற்றவர்களிடமிருந்து நம்மை தனிமைப்படுத்துவதைக் கற்பிக்கிறது. இதனாலேயே ஒரு அண்டை வீட்டாருக்கு யார் தன்னுடைய அண்டை வீட்டார், என்பது கூடத் தெரியாது.

இப்போது அல்லாஹ் உங்களுக்கு அறிவைக் கொடுத்திருக்கிறான், நீங்கள் முதிர்ச்சியடைந்த மனிதர்கள். எந்த வாழ்க்கை முறை சிறந்தது என்று சிந்தியுங்கள். நிச்சயமாக, இஸ்லாமிய மார்க்கம் தான் சிறந்த வாழ்க்கை முறை என்று உங்கள் இதயத்திலிருந்து ஒரு குரல் வெளிப்படும்.

## மனத்தூய்மை பற்றிய கண்ணோட்டம்

இஸ்லாம் நம் வாழ்க்கையை மனத்தூய்மை யுடன் வாழக்கற்றுக்கொடுக்கிறது. எனவே ஒரு முஸ்லிம் என்ன செய்தாலும், அவர் தனது சக மனிதர்களிடமிருந்து பாராட்டுகளைப்பெற விரும் பாமல் அல்லாஹ்வை மட்டுமே திருப்திப்படுத்த வேண்டும் என்று விரும்புவார்.

## நபித் தோழர்களின் காலத்தில் நடந்த சம்பவம்

மதாய்ன் வெற்றி கொள்ளப்பட்ட பிறகு போரில் கிடைத்த பொருட்களை முஜாஹித்கள் சேகரிக்கத் தொடங்கினர். சஅத் பின் அபி வக்காஸ் (ரலி) அவர்கள் அவ்விடத்தில் அமர்ந்திருந்தார்கள். ஒரு முஜாஹித் கிழிந்த ஆடைகளுடன் வந்தார். அவரது வாழ்க்கைத் தரம் மிகவும் மோசமாக இருந்தது போல் தெரிந்தது. அவர் தனது ஆடைகளில் ஏதோ ஒன்றை சுற்றி மறைத்திருந்தார். அவர் அதை எடுத்து சஅத் பின் அபி வக்காஸ் (ரலி) அவர்களிடம் கொடுத்து, "இதை நான் போர்க்களத்தில் கண்டெடுத்தேன். அதை உங்களிடம் கொடுக்க வந்துள்ளேன்" என்றார்.

ஸஅத் (ரலி) அவர்கள் அதைப் பார்த்தபோது, போரில் கொல்லப்பட்ட எதிரி மன்னனின் கிரீடம் அவருடைய துணிக்குள் இருப்பதைக் கண்டார்கள். கிரீடத்திற்குள் ஏராளமான மதிப்புமிக்க வைரங்களும் முத்துக்களும் இருந்தன. அதிலுள்ள ஒரு வைரத்தின் விலையும் அவரது முழு வாழ்க்கையின் செலவினத்திற்குப் போதுமானது. இதைப் பார்த்த சஅத் பின் அபி வக்காஸ் (ரலி) அவர்கள் இந்த மனிதர் யாரிடமும் சொல்லாமல், ஒவ்வொரு வைரமாக விற்று வரக் கூடிய பணத்தில் ஆடம்பரமாக வாழ எண்ணியிருந்தால் யாருக்கும் அது தெரியப்போவதில்லை. இப்பேற்பட்ட நிலையிலும் அவர் அதைக் கொண்டு வந்து ஒப்படைத்ததை எண்ணி ஆச்சரியப்பட்டார்கள்.

எனவே சஅத் பின் அபி வக்காஸ் (ரலி) அதே ஆச்சரியத்துடன் "ஓ இளைஞனே, நீ இந்த கிரீடத்தை அமானிதமாக ஒப்படைத்திருக்கிறாய். உன்னுடைய பெயர் என்னவென்று எனக்குச் சொல்" என்று கேட்டார்கள். அந்த இளைஞன் சஅத் பின் அபி வக்காஸ் (ரலி) அவர்களை விட்டும் முதுகைத் திருப்பிக் கொண்டு வெளியேறத் திரும்பினான். அவர், "ஓ சஅத் அவர்களே யாருக்காக நான் இந்த கிரீடத்தைத் திருப்பிக் கொடுத்தேனோ அந்த அல்லாஹ் என் பெயரையும், என் தந்தையின் பெயரையும் அறிவான்" என்றார்.

நம்முடைய இஸ்லாமிய மார்க்கம் நமக்கு

நேர்மையுடன் வாழக் கற்றுக்கொடுக்கிறது. எனவே நாம் இஸ்லாமிய வழிகாட்டலின் படி உண்மையான அர்த்தத்தில் நம் வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். அக்கால இளைஞர்கள், முதியவர்கள் மற்றும் பெண்களின் சிந்தனைத் தரங்கள் முற்றிலும் மாறுபட்டிருந்தன. அவர்களிடம் யாரையும் ஏமாற்றும் எண்ணம் இருக்கவில்லை. பாருங்கள், பெண்களின் விவகாரங்கள் பெரும்பாலும் சிக்கலாகவே இருக்கும். அப்படியிருந்தும் அந்தக் காலத்துப் பெண்கள் ஒருவருக்கொருவர் எவ்வளவு நேர்மையாக இருந்தார்கள் என்பதைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

## இரு சக்களத்திகளுக்கு மத்தியில் தூய்மையான, நேர்மையானத் தொடர்பு

ஒரு வணிகருக்கு அன்பான மனைவி ஒருவள் இருந்தாள். அல்லாஹ் அவளுக்கு அழகையும், நற்பேறுகளையும் கொடுத்திருந்தான். அவள் வாழ்க்கை நிம்மதியாக கழிந்து கொண்டிருந்தது. அவளுடைய கணவர் ஒரு பயணத்திற்காக வேறொரு நகரத்திற்குச் சென்றிருந்தார். அவர் சில சமயங்களில் அங்கு பல நாட்கள் தங்க வேண்டியிருந்தது. சமீப காலமாக தனது கணவர் நீண்ட நாட்கள் அங்கு தாங்குவதை அவள் உணர்ந்தாள்.

அவர் அங்கு வேறோரு திருமணம் ஏதும் செய்து கொண்டாரோ என்ற சந்தேகம் அவளுக்கு ஏற்பட்டது. எனவே அவள் ஒரு நம்பகமான பணிப்பெண்ணிடம் அவரைப் பின்தொடர்ந்து அவர் வசிக்கும் மற்றொரு நகரத்திலுள்ள அண்டை வீட்டாரிடம் சென்று தகவல்களைப் பெறச் சொன்னாள். அவர் ஏறத்தாழ 10 ,15 நாட்கள் அதே ஊரில் தங்கியிருப்பதால் அங்கே ஒரு பெண்ணை மணமுடித்துக் கொண்டார். மேலும் அவளுக்காக அங்கே தனி வீடு ஒன்றையும் தயார் செய்து அவ்வப்போது அவரும் அங்கு தங்கி வருகிறார்

என்ற தகவல் கிடைத்தது. அவர் முறையாக இரண்டாவது திருமணம் செய்து கொண்டுள்ளார். இது பாவமான ஒரு செயலல்ல.

அந்தப் பெண்ணிற்கு என் கணவர் மற்றொரு திருமணம் செய்து கொண்டார் என்ற தகவல் உறுதியான போது, நான் அவரோடு சண்டையிட்டால், என் கணவர் ஒன்று என் முன் கூனிக்குறுகி வெட்கப்பட வாய்ப்புண்டு அல்லது அவர் வெளிப்படையாக நான் இங்கேயும், அங்கேயும் நேரம் கொடுப்பேன் என்று துணிந்து சொல்லவும் வாய்ப்புண்டு. பிறகு நான் ஏன் இதைப் பற்றி அவரிடம் கேட்க வேண்டும் என்று யோசித்தாள். எனக்கும் என் கணவருக்கும் இடையே உள்ள நடுநிலையான அன்பில் நான் ஏன் குறுக்கீடு செய்ய வேண்டும்.

இதை நினைத்து, அவள் அதை ரகசியமாக வைத்திருக்க முடிவு செய்தாள். அவன் வியாபாரத்திற்காக அடிக்கடி சென்று வருகிற ஊரில் அவனுடைய இரண்டாவது மனைவி இருக்கிறாள் என்பது அவளுக்கு உறுதியாகத் தெரிந்தும் அவள் அதே அன்புடன் தொடர்ந்து தன் கணவனுடன் வாழ்ந்து வந்தாள். அல்லாஹ்வின் நாட்டப்படி சில மாதங்களுக்குப் பிறகு, அவளுடைய கணவர் இறந்துவிட்டார். அவளுடைய கணவர் இறந்தபோது, அவருடைய செல்வம் அனைத்தும் அவருடைய முதல் மனைவியிடம் இருந்தது. அவருடைய அடக்கம் முடிந்ததும், அவருடைய சொத்துக்களைப் பங்கிட நேரம் வந்த போது

அவருடைய மனைவி அவளுடைய பங்கையும் அவருடைய இரண்டாவது மனைவியின் பங்கையும் எடுத்து வைத்தாள்.

தன் கணவருக்கு இரண்டாவது திருமணம் நடந்ததாகச் சொன்ன அதே பெண்ணிடமே என் கணவரைப் பற்றி யாருக்கும் தெரியக்கூடாது,யாரும் அவரைப் பற்றி தவறாகப் பேசக்கூடாது என்று மிகவும் ரகசியமாக இரண்டாவது மனைவியின் பங்கை அவளிடம்  கொடுத்து அனுப்பினாள். ஏனெனில் அந்த மனைவிக்கும் அவருடைய சொத்தில் சட்டப்பூர்வ உரிமை உண்டு. நியாயத்தீர்ப்பு நாளில் நான் இதற்காக அல்லாஹ்விடம் பதில் சொல்ல வேண்டும். அவளுடைய உரிமையை நான் சாப்பிட முடியாது. எனவே இந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு, இது உன் கணவரின் சொத்தில் உனக்கு சேர வேண்டிய பங்கு, இதைப் பெற்றுக் கொள் என்று அவளிடம் சொல்லவும் என்றாள்.

அவ்வாறே அந்தப் பெண்ணும் பணத்தை எடுத்துக்கொண்டு அவளிடம் சென்றாள். அது நிறைய பணமாக இருந்தது. அவள் சென்று உன் கணவர் இறந்துவிட்டார் என்று சொன்னாள். இப்போது நீயும் அவருடைய இரண்டாவது மனைவி என்பதால் அவருடைய முதல் மனைவி அவருடைய சொத்திலிருந்து உன்னுடைய பங்கை கொடுத்திருக்கிறாள். அவள் உன் உரிமையைச் சாப்பிட்டால்,மறுமை நாளில் அவள் அல்லாஹ்விடம்

பதில் சொல்ல முடியாது. மக்களுக்கு இது தெரியாது, ஆனால் அல்லாஹ்வுக்குத் தெரியும். எனவே, உன் பங்கை நீ பெற்றுக் கொள் என்றாள். அந்தப் பெண் பணத்தை கையில் வாங்கிக் கொண்டு, "அல்லாஹ் அவளுக்கு கிருபை செய்வானாக. அவள் மிகவும் நல்ல பெண். அவள் என்னை மறக்காமல் கவனத்தில் வைத்த ஒரு நல்ல பெண்" என்றாள். பின்னர் அவள், "இப்பணத்தை என்னிடமிருந்து பெற்று அப்பெண்ணிடமே திருப்பிக் கொடுத்து விடு. ஏனென்றால் அவளுடைய கணவர் இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு என்னை விவாகரத்து செய்து விட்டார். இந்த விவாகரத்தைப் பற்றி எனக்குத் தெரியும் அல்லது என் அல்லாஹ் அதைப் பற்றி அறிந்திருக்கிறான். எனவே, இந்த சொத்தில் எனக்கு எந்தப் பங்கும் கிடையாது. அது அவளுடைய பங்கு மட்டுமே. அதை அவளிடமே திருப்பிக் கொடுத்து விடு என்றாள்.

இந்தப் போதனைகள் என்ன மாதிரியான வாழ்க்கையைத் தந்துள்ளன? இது போன்ற வாழ்வை இஸ்லாம் தான் வழங்கும். உலகிற்கு உண்மை என்னவென்று தெரியாது. மனிதர்களின் உள்ளத்தில் அல்லாஹ்வின் பயம் இருந்தால், மக்கள் ஒருவருக்கொருவர் பிறரது உரிமைகளை மிகவும் மதிப்பார்கள்.

# ஒரு ஏழையின் தூய்மையான எண்ணம்

டெல்லி ஜாமிஆ மசூதியின் கட்டிட வேலைப்பாட்டு கலை நயத்தைப் பார்வையிட ஒரு ஆங்கிலேயர் வந்திருந்தார். அவர் வேலைப்பாட்டுக் கலையில் சிறந்த நிபுணராவார். அவர் மசூதியின் படிகளில் ஏறும் போது, மாற்றுத்திறனாளியான ஒரு முஸ்லிம் பிச்சைக்காரர் அவரிடம் வந்து, "எனக்கு ஏதாவது கொடுங்கள். நான் ஏழை" என்றார். அவர் தனது சட்டைப் பையிலிருந்து பணப்பையை எடுத்து அவருக்கு கொஞ்சம் பணம் கொடுத்தார். பின்னர் அவர் பணப்பையை தனது சட்டைப் பையில் வைக்க எண்ணிய போது, பணப்பை தவறி கீழே விழுந்துவிட்டது. அது கீழே விழுந்ததை உணராமல் அவர் அங்கிருந்து சென்று விட்டார்.

பிறகு அவர் மசூதியைச் சுற்றிப் பார்த்தார். அவருக்கு அதிலிருந்த கைவேலைப்பாடுகள் மிகவும் பிடித்திருந்ததன. அங்கிருந்து, அவர் வீட்டிற்குச் சென்றார். வீட்டிற்கு வந்த பிறகு, தன் மனைவியிடம் டெல்லி ஜாமிஆ மசூதியின் கைவேலைப்பாடுகளை தான் பார்த்ததாகவும், அது மிக அழகாக இருந்ததாகவும் பேசிக் கொண்டிருந்தார். அவரது மனைவியும் இந்தத் துறையில் நன்கு படித்தவராக இருந்தார். எனவே,

"சரி, அடுத்த ஞாயிற்றுக்கிழமை என்னையும் அழைத்துச் செல்லுங்கள் நானும் வந்து பார்க்கிறேன்" என்றாள்.

அவரும் அவளை அழைத்துச் செல்வதாக வாக்களித்தார். அன்றைய இரவில்தான் பணப்பை தொலைந்து போனதை அறிந்தார். ஆனால் அது எங்கே விழுந்தது என்பது கூட அவருக்கு நினைவில் இல்லை. அதில் பல நூறு ரூபாய்கள் இருந்தன. அந்த நேரத்தில், 100 ரூபாய் என்பது ஒரு பெரிய தொகையாகும். அதனால் அவர் மிகவும் வருத்தப்பட்டார். ஆனால் பின்னர், "இப்போது நடக்க வேண்டியது நடந்து விட்டது" என்று நினைத்து தன்னை சமாதானப் படுத்திக் கொண்டார். அடுத்த வாரம், அவர் தனது மனைவியை அந்த மசூதியின் வேலைப் பாடுகளை காட்ட அழைத்துச் சென்றார்.

படிக்கட்டுகளில் ஏறும் போது, அதே ஊனமுற்ற பிச்சைக்காரர் தன்னை நோக்கி வருவதைக் கண்டார். ஆனால் அவர் இம்முறை பணம் கேட்டு தன் பிச்சைப்பாத்திரத்தை நீட்டுவதற்குப் பதிலாக, ஒரு பணப்பையை தன் மடியிலிருந்து எடுத்து, கடந்த வாரம் உங்கள் பணப்பை விழுந்துவிட்டது. நீங்கள் அதைக் கண்டு கொள்ளாமல் சென்றுவிட்டீர்கள். இதோ இதை பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்" என்று அவரிடம் கொடுத்தார். அவர் தனது பணப்பையை வாங்கிப் பார்த்த போது, அதில் ஆவணங்களும்,

பணமும் அப்படியே இருப்பதை அறிந்தார். ஒரு ரூபாய்க்காக கையேந்தி ஏங்கிக் கொண்டிருக்கும் யாசகர்களுக்கு மத்தியில் நூற்றுக்கணக்கான ரூபாய்கள் இருந்த இந்த பணமுடிப்பை அவர் தனக்கென வைத்துக்கொள்ளவில்லை.

அவர் யாரிடமும் சொல்லாமல் அமைதியாக இருந்திருந்தால், பணம் எங்கே என்று எனக்கும் தெரிந்திருக்காது. ஆனால் ஏன் அவர் அதை தன்னிடம் வைத்துக் கொள்ளவில்லை என்று மிகவும் ஆச்சரியப்பட்டவராக அந்த ஆங்கிலேயர் அவரிடம் நீங்கள் பணத்தை எடுத்திருந்தாலும், அது யாரிடம் இருக்கிறது என்று எனக்குத் தெரியாதே! ஏன் அதைத் திருப்பிக் கொடுத்தீர்கள் என்று கேட்டார்?. அதற்கு அந்தப் பிச்சைக்காரர் நான் அதை வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எனக்கு முதலில் ஏற்பட்டது.

பின்னர் எழுந்த மற்றொரு எண்ணமே உன்னைக் கண்டுபிடித்து திருப்பித் தருவதற்கு என்னைத் தூண்டியது என்றார். ஆங்கிலேயர் உனக்கு என்ன எண்ணம் வந்தது என்று கேட்டார். அதற்கு அவர் "உன்னுடைய இந்தப் பணப்பையை நான் வைத்திருந்தால், மறுமை நாளில், உன்னுடைய தூதரான ஹஜ்ரத் ஈஸா عَلَيْهِ السَّلَام என்னுடைய நபியான ஹஜ்ரத் முஹம்மத் ﷺ அவர்களிடம் உம்முடைய உம்மதிலுள்ள ஒருவர் என் உம்மதைச் சேர்ந்தவரின் பணத்தைத் திருடிவிட்டதாகக் குறை சொல்வார்கள் என்ற எண்ணம் என் மனதில்

தோன்றியதாக" பதிலளித்தார்.

பிச்சைக்காரர்களின் சிந்தனை இப்படி இருந்துள்ளது. யார் இதைக் கற்றுக்கொடுத்தார்கள்? இஸ்லாமிய மார்க்கம் தான் இவ்வகையான எண்ணத்தைத் தந்தது. இது ஒரு இளைஞனின் தீனுடைய நம்பிக்கையாகும். தீனுடைய வழிகா ட்டலை பின்பற்றி வாழ்பவருக்கு முதுமையிலும் இதே சிந்தனை தான் நிலைத்திருக்கும்.

# ஒரு இரக்கமுள்ள ஹாஜியின் தூய்மையான எண்ணம்

மினாவுடைய மைதானத்தில் ஒரு முதியவர் தனது பையை சுமந்து சென்று கொண்டிருந்தார். அதில் அவரது செலவுக்கான பணம் இருந்தது. ஒரு இளைஞன் அவர் அருகில் வந்து அந்தப் பையைப் பறித்துக்கொண்டு ஓடிவிட்டான். அந்த முதியவரின் அனைத்து உடமைகளும் அந்தப் பையில் தான் இருந்தன. அவர் செய்வதறியாது திகைத்து நின்றார். அந்த இளைஞன் அவ்விடத்திலிருந்து சிறிது நகர்ந்தபோது, அவனுக்கு மயக்கம் வருவது போலாகி, கண்கள் இருண்டு விட்டன. அதனால் அவன் அழத் தொடங்கி விட்டான்.

மக்கள் அவனிடம் ஏன் அழுகிறாய் என்று கேட்டார்கள். அவர், "நான் இந்த பையை ஒரு முதியவரிடமிருந்து பறித்தேன். அவர் என்னை சபித்ததாக நினைக்கிறேன். அதனால்தான் நான் என் பார்வையை இழந்துவிட்டேன். அவரிடம் மன்னிப்பு கேட்க என்னை அவரிடம் அழைத்துச் செல்லுங்கள்" என்றான்.

மக்கள் அவரை அந்த முதியவரிடம் அழைத்துச் சென்றார்கள். பெரியவரே! இவரை மன்னித்து

விடுங்கள். இவர் தவறு செய்துவிட்டார். இப்போது இவர் அழுகிறார். உங்கள் சாபத்தால் அவரது பார்வை போய்விட்டது" என்று கூறினர். அதற்கு அவர் "அதைத் திருடியபோதே, நான் அவரை மன்னித்துவிட்டேன்" என்றார். மக்கள் மிகவும் ஆச்சரியப்பட்டு, "பெரியவரே! அவர் உங்கள் பையைத் திருடியுள்ளார். அவன் திருடிய அந்த நேரத்திலேயே நான் அவரை மன்னித்துவிட்டேன் என்று நீங்கள் கூறுகிறீர்களே, இதன் அர்த்தம் என்ன என்று கேட்டார்கள். "அந்நேரத்தில் எனக்கு ஒரு எண்ணம் தோன்றியது. அதன் காரணமாக நான் அவரை மன்னித்தேன்" என்று பதிலளித்தார்.

அவர்கள், "பெரியவரே! அந்த எண்ணம் என்ன?" என்று கேட்டனர். "நபி ﷺ அவர்கள், «நியாயத்தீர்ப்பு நாளில், என் சமூகம் விசாரிக்கப்படும். என் சமூகத்தின் கடைசி மனிதன் விசாரிக்கப்படும் வரை நான் அங்கேயே இருப்பேன். அதுவரை நான் சொர்க்கத்திற்குப் போக மாட்டேன்" என்று அறிஞர்களிடமிருந்து நான் கேள்விப்பட்டுள்ளேன். இவன் என் பையுடன் ஓடிய போது நான் அவனை மன்னிக்கவில்லை என்றால், நியாயத்தீர்ப்பு நாளில் அல்லாஹ்வின் நீதிமன்றத்தில் என்னால் வழக்கு விசாரணையில் தாமதம் ஏற்படும் என்ற எண்ணம் என் மனதில் தோன்றியது.

இந்த வழக்கைத் தீர்க்க எவ்வளவு கால

தாமதம் ஏற்படுமோ அதுவரையில் என் நேசர் நபி ﷺ அவர்கள் சொர்க்கத்திற்குச் செல்வது தாமதமாகும். எனவே நான் அவரை மன்னித்தேன். அதனால் இவன் பற்றிய வழக்கு மறுமையில் விசாரிக்கப்படாது. அதனால் என் நேசர் என் காரணமாக சொர்க்கத்திற்குச் செல்வதில் தாமதம் ஏற்படாது என்று கூறினார்.

இதுதான் சத்திய வாழ்க்கை முறை. இதுதான் உயிரோட்டமுள்ள உள்ளத்தின் விருப்பமாக இருக்கும். இப்போது நாம் ஏற்றுக் கொண்டுள்ள இஸ்லாமிய வாழ்க்கை முறையே தங்கம் என்று உங்கள் மனதில் முடிவு செய்யுங்கள். ஆனால் குஃப்ருடைய சக்திகள் இக்கொள்கைகளை தமது ஆற்றலால், தந்திரத்தால் பித்தளையாகக்காட்ட முற்படுகின்றன.

அவை வெட்கத்தை இழிவு என்பதாகவும், வெட்கமற்ற தன்மையை கண்ணியமானதாகவும், விட்டுக்கொடுத்தலை தப்பானதாகவும், சுயநலத்தை நல்லதாகவும் காட்டுகின்றன. அதேபோல், நான் உங்கள் முன் வைத்த இந்த ஏழு வெவ்வேறு கண்ணோட்டங்களை நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்தால், இஸ்லாமிய மார்க்கம் தான் சரியான, சத்தியமான வாழ்க்கை முறை என்று உங்கள் உள்ளத்தில் தெளிவான குரல் ஒலிக்கும்.